during night and dancing in the crematory!
Pray tell us: what indeed has induced You
to abide in love, at Ganapatiēcchuram,
situate in the opulent and glorious Chengkāttangkudi,
rich in waters where flourish plump carp?

2. நெய் தவழ் மூஎரி காவல் ஓம்பும் நேர் புரிநூல் மறையாளர் ஏத்த,
மை தவழ் மாடம் மலிந்த வீதி மருகல் நிலாவிய மைந்த! சொல்லாய்—
செய் தவ நால்மறையோர்கள் ஏத்தும் சீர் கொள் செங்காட்டங்குடி அதனுள்
கை தவழ் கூர் எரி ஏந்தி ஆடும் கணபதியீச்சுரம் காமுறவே?

2. Hailed by the righteous who are well-versed in the Vedas –
the wearers of the sacred thread that foster
the triple fire with pure ghee,
O mighty One, You abide at Marukal in whose streets
are mansions over which clouds graze.
O Lord, You sport in Your hand the blazing fire
and dance; pray tell us: what indeed hath

impelled You to abide in love at Ganapatiēcchuram
situate in the renowned Chengkāttangkudi,
hailed by them that are well-versed in the Vedas
and who are poised in *tapas*?

3. தோலொடு நூல்-இழை சேர்ந்த மார்பர், தொகும் மறையோர்கள், வளர்த்த செந்தீ
மால்புகை போய் விம்மு மாட வீதி மருகல் நிலாவிய மைந்த! சொல்லாய்—
சேல் புல்கு தண்வயல் சோலை சூழ்ந்த சீர் கொள் செங்காட்டங்குடி அதனுள்
கால் புல்கு பைங்கழல் ஆர்க்க ஆடும் கணபதியீச்சுரம் காமுறவே?

3. O mighty One, You abide at Marukal in whose street
are mansions whence the smoke from the ruddy fire
of the *yagas* that are fostered by the assembled
Brahmins whose chests are adorned with
strands of sacred thread to which are fastened
snippets of deer-skin,
spirals up and up!
O One who so dances that Your ever-new anklets resound!
Pray, tell us: what indeed hath goaded You
to abide in love at Ganapatiēcchuram
situate in the celebrated Chengkāttangkudi,
girt with gardens and cool fields
where *cale* fish leap about?

4. நா மரு கேள்வியர் வேள்வி ஓவா நால்மறையோர் வழிபாடு செய்ய,
மா மருவும் மணிக் கோயில் மேய மருகல் நிலாவிய மைந்த! சொல்லாய் —
தேமரு பூம்பொழில்— சோலை சூழ்ந்த சீர்கொள் செங்காட்டங்குடிஅதனுள்
காமருசீர் மகிழ்ந்து எல்லி ஆடும் கணபதியீச்சுரம் காமுறவே?

4. Hailed by the Brahmins well-versed in the four Vedas
who never cease from performing *yagas*
with appropriate Vedic mantras,
O mighty One, You abide at the great and gemmy
shrine of Marukal!
Pray, tell us: what indeed hath induced You to abide
in love and dance in delight during night
at the beauteous and bewitching Ganapatiēcchuram
girt with flowery gardens and groves divine?

5. பாடல் முழவும் விழவும் ஓவாப் பல்மறையோர் அவர்தாம் பரவ,
மாட நெடுங்கொடி விண் தடவு மருகல் நிலாவிய மைந்த! சொல்லாய்—
சேடகம் மா மலர்ச்சோலை சூழ்ந்த சீர் கொள் செங்காட்டங்குடி அதனுள்
காடுஅகமே இடம்ஆக ஆடும் கணபதியீச்சுரம் காமுறவே?

5. Hailed by the multitudinous Brahmins, You abide
at Marukal where streamers fastened
to the tall poles in mansions, brush the heavens.
At Marukal abound song and beat of drums and festivities.
O Lord that dances in the crematorium!
Pray, tell us: what indeed hath induced You to abide,
in love, at Ganapatiēcchuram
situate in the glorious Chengkāttangkudi
girt with groves rich in large *cetaka* flowers?

6. புனைஅழல் ஓம்பு கை அந்தணாளர் பொன்அடி நாள்தொறும் போற்றுஇசைப்ப,
மனை கெழு மாடம் மலிந்த வீதி மருகல் நிலாவிய மைந்த! சொல்லாய்—
சினை கெழு தண்வயல், சோலை, சூழ்ந்த சீர்கொள் செங்காட்டங்குடிஅதனுள்
கனை வளர் கூர் எரி ஏந்தி ஆடும் கணபதியீச்சுரம் காமுறவே?

6. The Brahmins that foster the ritualistic sacrificial fire,
daily hymn and hail Your golden feet.
Thus, O Almighty, You abide at Marukal, the streets
of which are dight with commodious mansions.
Pray, tell us: what indeed hath impelled You to abide,
in love, holding in Your hand the fierce and crackling fire
and dance at Ganapatiēcchuram
situate in the celebrated Chengkāttangkudi
girt with groves and cool fields of sprouting crops?

7. It is said that the seventh verse of this decad is not traceable.

8. பூண் தங்கு மார்பின் இலங்கை வேந்தன் பொன்நெடுந்தோள் வரையால் அடர்த்து,
மாண் தங்கு நூல் மறையோர் பரவ, மருகல் நிலாவிய மைந்த! சொல்லாய்—
சேண் தங்கு மா மலர்ச்சோலை சூழ்ந்த சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்
காண் தங்கு தோள் பெயர்த்து எல்லி ஆடும் கணபதியீச்சுரம் காமுறவே?

8. Seated on Mount Kailas, You crushed the long
and golden shoulders of the King of Lanka,
the one adorned with jewels galore on his chest.
Hailed by them versed in the majestic scriptures,
You, O Almighty, abide at Marukal;
You dance at night flexing Your beauteous arms.
Pray, tell us: what indeed hath induced You
to abide in love at Ganapatiēcchuram
situate in the famed Chengkāttangkudi
and girt with flowery and sky-vaulting gardens?

9. அந்தமும் ஆதியும், நான்முகனும் அரவுஅணையானும், அறிவு அரிய,
மந்திரவேதங்கள் ஓதும் நாவர் மருகல் நிலாவிய மைந்த! சொல்லாய்—
செந்தமிழோர்கள் பரவி ஏத்தும் சீர் கொள் செங்காட்டங்குடி அதனுள்
கந்தம் அகில்புகையே கமழும் கணபதியீச்சுரம் காமுறவே?

9. Vishnu could not find Your feet;
so too Brahma Your crown.
You, O Almighty, abide at Marukal where dwell
the reciters and chanters of the Vedas and their mantras!
Pray, tell us: what indeed did impel You to abide,
in love, at Ganapatiēcchuram – ever pervaded
by the smoke of eaglewood and incense –,
situate in the renowned Chengkāttangkudi,
hailed and adored by the masters of chaste Tamil?

10. இலை மருதே அழகுஆக நாளும் இடு துவர்க்காயொடு சுக்குத் தின்னும்
நிலை அமண் தேரரை நீங்கி நின்று, நீதர் அல்லார் தொழும்மா மருகல்,
மலைமகள் தோள் புணர்வாய்! அருளாய்— மாசு இல் செங்காட்டங்குடி அதனுள்
கலை மல்கு தோல் உடுத்து எல்லி ஆடும் கணபதியீச்சுரம் காமுறவே?

10. The robes of the Teras are dyed with the essence of *marudam* leaves;
the Samanas eat daily areca-nut and dried ginger.
They that have no nexus with those depraved ones
hail the great Marukal whereat, O You Lord
that art concorporate with the Daughter
of the Mountain, abide.
Clad in deer-skin, O Lord, You dance during night.
Pray, tell us: what, in sooth, hath induced You
to abide in love, at Ganapatiēcchuram
situate in the flawless Chengkāttangkudi?

11. நாலும் குலைக் கமுகு ஓங்கு காழி ஞானசம்பந்தன், நலம் திகழும்
மாலின் மதி தவழ் மாடம் ஓங்கு மருகலில் மற்று அதன்மேல் மொழிந்த,
சேலும் கயலும் திளைத்த கண்ணார் சீர் கொள் செங்காட்டங்குடி அதனுள்
சூலம்வல்லான் கழல் ஏத்து, பாடல் சொல்ல வல்லார் வினை இல்லைஆமே.

11. Gnānasambandhan of Kāzhi where abound
bunchy and spatheceous areca trees,
has sung these weal-conferring hymns,
hailing the Lord of Marukal over whose
lofty mansions sail the moon and clouds galore,
and also the Lord-Wielder of the Trident
who is the Lord of glorious Chengkāttangkudi
where flourish damsels
whose eyes roll like *cale* and *kayal*.

The karma of them that recite these verses,
in devotion married to sincerity,
will altogether cease.

Notes

1. Ganapatiēcchuram: The shrine at Chengkāttangkudi.

   Marukal: This town is named after the temple-tree *Marukal*, a kind of plantain tree.

   Chengkāttangkudi: It was here Lord Ganapati smote the Asura called Gajamukha. His blood encrimsoned the town which came to be known as Chengkāttangkudi (the place red with blood).

3. Cale: Carnatic carp.

4. Te'(தே) : It means deity.

   Yāgā: Vedic sacrifice.

5. Cetakam (சேடகம்): This flower is yet to be identified.

10. Marudam: Queen's flower tree (Terminalia arjuna).

7. Tirunallāru and Tiruālavāi
Interrogatory verse

In the ordeal by fire, our Saint vanquished the Samanas. His palm-leaf decad on Nallāru, when consigned to the raging fire, remained not only unburnt but also fadeless and fresh. He returned from Madurai and continued his pilgrimage. After visiting Kollampūdūr, he arrived at Nallāru and hailed the shrine in the following decad.

7. திரு நள்ளாறும், திரு ஆலவாயும்
(வினா உரை)

பண்: நட்டபாடை

1. பாடக மெல்அடிப் பாவையோடும், படு பிணக்காடுஇடம் பற்றி நின்று,
நாடகம்ஆடும், நள்ளாறு உடைய, நம்பெருமான்! இது என்கொல் சொல்லாய்—
சூடக முன்கை மடந்தைமார்கள் துணைவரொடும் தொழுது ஏத்தி வாழ்த்த,
ஆடகமாடம் நெருங்கு கூடல் ஆலவாயின்கண் அமர்ந்தஆறே?

1. O Lord of Nallāru, You are concorporate with the Woman
whose soft feet are decked with anklets.
You choose to dance in the crematory of corpses.
O our Lord-God, pray, tell us: what may this be?
Why is it that you are enthroned in Ālavāi
at Kūdal rich in golden mansions galore,
hailed, adored and magnified by women
whose forearms are adorned with bracelets,
and also adored by their respective husbands?

2. திங்கள்அம்போதும் செழும்புனலும் செஞ்சடைமாட்டு அயல் வைத்து உகந்து,
நம் கண் மகிழும், நள்ளாறு உடைய, நம்பெருமான்! இது என்கொல் சொல்லாய்—
பொங்கு இளமென்முலையார்களோடும் புனமயில் ஆட, நிலா முளைக்கும்
அம் களகச்— சுதை மாடக் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்தஆறே?

2. O our Lord-God of Nallāru to adore which we rejoice!
You delight to sport on Your hirsutorufous, matted crest
the crescent, flowers fragrant and the eesome flood!
Pray, tell us: what may this be?
Why is it You are enthroned in Ālavāi at Kūdal
rich in pleasing and plastered mansions
over the terraces of which sprouts the moon;
there, with damsels of soft and swelling breasts
the sylvan peacocks dance.

3. தண் நறுமத்தமும் கூவிளமும் வெண்தலைமாலையும் தாங்கி, யார்க்கும்
நண்ணல் அரிய, நள்ளாறு உடைய, நம்பெருமான்! இது என்கொல் சொல்லாய்—
புண்ணியவாணரும் மா தவரும் புகுந்து உடன்ஏத்த, புனையிழையார்
அண்ணலின் பாடல் எடுக்கும் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்தஆறே?

3. O our Lord- God of Nallāru which is inaccessible
to sinners, whoever they be!
You wear on Your person cool and olent *ūmattham*,
kūvilam and a garland of crania!
Pray, tell us: what may this be?
Why is it You are enthroned in Ālavāi at Kūdal
where holy men and tapaswis foregather and adore,
and bejewelled belles hail You in melodic hymns.

4. பூவினில் வாசம், புனலில் பொற்பு, புது விரைச்சாந்தினில் நாற்றத்தோடு,
நாவினில் பாடல், நள்ளாறு உடைய, நம்பெருமான்! இது என்கொல் சொல்லாய்—
தேவர்கள், தானவர், சித்தர், விச்சாதரர், கணத்தோடும் சிறந்து பொங்கி,
ஆவினில்ஐந்து உகந்து ஆட்டும் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்தஆறே?

4. O our Lord-God of Nallāru!
You are the fragrance in flower,
the soothing coolth of water,
the fresh suaveolence of odoriferous paste
and the sweetness of the mellifluous tongue.
Pray, tell us: what may this be?
Why is it You are enthroned in Ālavāi at Kūdal
delighting in Your ablutions of *pancha-kavya*,
hailed in swelling love by the Deva-hosts,
Tānavas, *Siddhas* and *Vidyādaras*?

5. செம்பொன் செய் மாலையும், வாசிகையும், திருந்து புகையும், அவியும், பாட்டும்
நம்பும் பெருமை, நள்ளாறு உடைய, நம்பெருமான்! இது என்கொல் சொல்லாய்—
உம்பரும், நாகர்உலகம்தானும், ஒலிகடல் சூழ்ந்த உலகத்தோரும்,
அம்புதம்நால்களால் நீடும் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்தஆறே?

5. O our Lord-God of loving kindness of Nallāru,
You are adorned with chains of ruddy gold;
The *Tiruvāsi* over-arches You.
You are adored with the smoke of incense,
havi-s and hymns.
Pray, tell us: what may this be?
Why is it You are enthroned in Ālavāi at Kūdal
which is extensively roofed of a quartet of clouds,
hailed by the heavenly world, the world of *Nāgas*
and the earth girt with resounding oceans?

6. பாகமும் தேவியை வைத்துக்கொண்டு, பை விரி துத்திப் பரிய பேழ்வாய்
நாகமும் பூண்ட, நள்ளாறு உடைய, நம்பெருமான்! இது என்கொல் சொல்லாய் —

போகமும் நின்னை மனத்துவைத்துப் புண்ணியர் நண்ணும் புணர்வு பூண்ட
ஆகம் உடையவர் சேரும் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்த ஆறே?

6. O our Lord-God of Nallāru, You are concorporate
with Your Consort; You wear a serpent
of speckled hood whose large mouth is (ever) agape!
Pray, tell us: what may this be?
Why is it You are enthroned in Ālavāi at Kūdal
sought by the holy ones who entemple you
in their Siva-consciousness to come by *Siva-bhoga*?

7. கோவணஆடையும், நீற்றுப்பூச்சும், கொடுமழு ஏந்தலும், செஞ்சடையும்,
நாவணப் பாட்டும், நள்ளாறு உடைய, நம்பெருமான்! இது என்கொல் சொல்லாய்—
பூவண மேனி இளைய மாதர், பொன்னும் மணியும் கொழித்து எடுத்து,
ஆவணவீதியில் ஆடும் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்தஆறே?

7. Our Lord-God of Nallāru,
You are clad in a loin-cloth; You are bedaubed
with the holy ash; You wield a fierce *mazhu;*
Your hirsutorufous crest is matted
and Your tongue melodises variform hymns!
Pray, tell us: what may this be?
Why is it You are enthroned in Ālavāi at Kūdal
in the streets of which trade thrives
and young women of flower-soft bodies,
sift gold and gems and this done, dance?

8. இலங்கை இராவணன் வெற்பு எடுக்க, எழில் விரல் ஊன்றி, இசை விரும்பி,
நலம் கொளச் சேர்ந்த, நள்ளாறு உடைய, நம்பெருமான்! இது என்கொல் சொல்லாய்—
புலன்களைச் செற்று, பொறியை நீக்கி, புந்தியிலும் நினைச் சிந்தைசெய்யும்
அலங்கல் நல்லார்கள் அமரும் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்தஆறே?

8. O our Lord-God of Nallāru, of yore, You crushed
with Your beautiful toe Lanka's Ravana
who durst uproot the Mountain;
then pleased with his music, You graced him.
Pray, tell us: what may it be?
Why is it You are enthroned in Ālavāi
at precious Kūdal – the abode of them that are
poised in askesis, and who having quelled
their senses and sense-organs, meditate
(for ever) on You?

9. பணி உடை மாலும் மலரினோனும், பன்றியும் வென்றிப் பறவைஆயும்,
நணுகல் அரிய, நள்ளாறு உடைய, நம்பெருமான்! இது என்கொல் சொல்லாய்—
மணிஒலி சங்குஒலியோடு மற்றை மா முரசின்(ன்) ஒலி என்றும் ஓவாது
அணி கிளர் வேந்தர் புகுதும் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்தஆறே?

9. O our Lord-God of Nallāru who is inaccessible
to Vishnu whose bed is the Snake Ādisesha
and Brahma on the Lotus,
who both pursued You in the assumed forms
of a hog and a bird that claimed spurious victory!
Pray, tell us: what may this be?
Why is it You are enthroned in Ālavāi at Kūdal
where resound (for ever) bells and shells and drums great
when kings decked with lustrous jewels
foregather to pay their tribute?

10. தடுக்கு உடைக் கையரும் சாக்கியரும், சாதியின் நீங்கிய அத் தவத்தார்
நடுக்குஉற நின்ற, நள்ளாறு உடைய, நம்பெருமான்! இது என்கொல் சொல்லாய்—
எடுக்கும் விழவும் நன்நாள் விழவும் இரும் பலி இன்பினோடு எத்திசையும்
அடுக்கும் பெருமை சேர் மாடக் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்தஆறே?

10. O our Lord of Nallāru!
The Samanas who tote mats, and the Buddhists –
the pseudo-*tapaswis* and deviators from
their (true) tradition,
shudder even to think on Your Nallāru.
Pray, tell me: what may this be?
Why are You enthroned at Ālavāi at Kūdal
which is dight with mansions and celebrated
joyously in all the eight directions,
for its ever-crescent renown
and where quotidian and seasonal festivities
together with the offering of *bali* take place?

11. அன்புஉடையானை, அரனை, "கூடல் ஆலவாய் மேவியது என்கொல்?" என்று,
நன்பொனை, நாதனை, நள்ளாற்றானை, நயம் பெறப் போற்றி, நலம் குலாவும்
பொன் புடை சூழ்தரு மாடக் காழிப் பூசுரன்— ஞானசம்பந்தன்— சொன்ன
இன்பு உடைப் பாடல்கள்பத்தும் வல்லார், இமையவர் ஏத்த இருப்பர்தாமே.

11. Gnānasambandhan – truly the Deva on earth –,
of golden Kāzhi abounding in mansions
where reigns prosperous uberty,
has in exquisite excellence hailed
in weal-conferring hymns the pure Gold –

the Lord of Nallāru thus: "Wherefore have You,
O Hara of abiding love, chosen to get
entempled in Ālavāi at Kūdal?"
They that are valiant in these ten psalms
will abide in Heaven, hailed by the celestials.

Notes

1. Kūdal: Madurai is Nān-māda-k-kūdal. When Varuna sent the seven great clouds to Madurai to destroy it with their downpour, Siva bade a set of four clouds to form themselves into a foursome palladium, nullifying the effect of the disastrous downpour. Since that day Madurai came to be known as Nān-māda-k-kūdal.

2. The terrace(s): It is known as Aramiyam – "a terrace on the top of a house for a walk by moonlight." - Winslow.

3. Ūmattham: Datura. Its flower is dear to Siva.

   Kūvilam: Aegle marmelos. Bael/bel/bhel. The leaves of this tree are used in Siva-archana.

4. Pancha-kavya: It is compounded of cow's milk, curds, ghee, urine and dung. This is considered to be very sacred.

5. Tiruvāsi: An arch under which the idol of Siva is placed.

   Havi-s: Oblations offered in the sacrificial fire.

   The world of Nāgas: The nether world of serpents.

6. Bhoga: Bliss. The reader will do well to study in depth Gurugnānasambandhar's Siva Bhoga Sāram, an opus of spiritual excellence.

10. Bali: Food-offering to the Deity.

8. Tiruāvūr Pasupatiēcchuram

From Tiruppūvanūr the boy-saint arrived at Āvūr where he sang the following decad.

8. திருஆவூர்ப் பசுபதீச்சுரம்

பண்: நட்டபாடை

1. "புண்ணியர், பூதியர், பூதநாதர், புடைபடுவார்தம் மனத்தார், திங்கள்—
கண்ணியர்!" என்றுஎன்று காதலாளர் கைதொழுது ஏத்த, இருந்த ஊர்ஆம்—
விண் உயர்மாளிகை மாட வீதி விரை கமழ்சோலை சுலாவி, எங்கும்
பண் இயல் பாடல் அறாத— ஆவூர்ப் பசுபதியீச்சுரம் பாடு, நாவே!

1. Āvūr is the place where abides the Lord-God
hailed by loving devotees that adore Him
with folded hands, magnify the Righteous One,
as the One that wears the chaplet of a crescent
and as the One that indwells His loving servitors.
Thus the devotees hail Him standing close to Him.
O tongue, hail Pasupatiēcchuram, pervaded by
ceaseless and tuneful music at Āvūr, the streets
of which are girt with fragrant gardens.

2. "முத்தியர், மூப்பு இலர், ஆப்பின் உள்ளார், முக்கணர், தக்கன்தன் வேள்வி சாடும்
அத்தியர்" என்றுஎன்று அடியர் ஏத்தும் ஐயன் அணங்கொடு இருந்த ஊர்ஆம்—
தொத்து இயலும் பொழில் பாடு வண்டு துதைந்து எங்கும் தூமதுப் பாய, கோயில்
பத்திமைப் பாடல் அறாத- அவூர்ப் பசுபதியீச்சுரம் பாடு, நாவே!

2. Āvūr is the polis where abides the Lord-God
with His Woman, hailed by the devotees
who praise Him as the One
who is the Conferrer of *moksha*,
the One that never ages, the One abiding at Āppu,
the One of trinocular vision and the One
that advisedly smote Daksha's *yāga*.
O tongue, hymn the shrine of Pasupatiēcchuram
ever-pervaded by ceaseles and tuneful music divine
at Āvūr in whose gardens fragrant with flower-clusters,
pure honey flows from all sides when chafers pierce them.

3. பொங்கி வரும் புனல் சென்னி வைத்தார், போம் வழி வந்து இழிவு ஏற்றம் ஆனார்,
இங்கு உயர் ஞானத்தர், வானோர் ஏத்தும் இறையவர், என்றும் இருந்த ஊர்ஆம் —
தெங்கு உயர் சோலை, சேர் ஆலை, சாலி திளைக்கும் விளை வயல், சேரும் பொய்கைப்
பங்கயமங்கை விரும்பும் — ஆவூர்ப் பசுபதியீச்சுரம் பாடு, நாவே!

3. Though treading the way of *karma*,
they outgrew their littleness, growing lofty;
Such men of supreme Gnosis and the celestials too
hail Him as the One that holds
on His crest the upsurging flood.
He, the Lord-God abides in this town of Āvūr.
O tongue, hymn Pasupatiēcchuram
dear to Lakshmi whose seat is the Lotus,
at Āvūr, rich in coconut groves, fields
of flourishing paddy-crops and pools
near which are situate sugarcane-presses.

4. தேவி ஓர்கூறினர், ஏறுஅது ஏறும் செல்வினர், நல்குரவு என்னை நீக்கும்
ஆவியர், அந்தணர், அல்லல் தீர்க்கும் அப்பனார், அங்கே அமர்ந்த ஊர்ஆம் —
பூ இயலும் பொழில் வாசம் வீச, புரிகுழலார் சுவடு ஒற்றி, முற்றப்
பா இயல் பாடல் அறாத— ஆவூர்ப் பசுபதியீச்சுரம் பாடு, நாவே!

4. His Consort is part of Him; His carrier is the Bull;
He is my very life who rids me of my indigence;
He is the Brahmin; He, the Father, quells troubles;
He is entempled in Āvūr.
O tongue, hymn Pasupatiēcchuram –
ever pervaded ceaselessly by tuneful songs
for which time is concordantly kept
by the feet of danseuses of curly hair –,
at Āvūr dight with flowering pools
whence waft balmy gales.

5. இந்து அணையும் சடையார், விடையார், இப் பிறப்பு என்னை அறுக்க வல்லார்,
வந்து அணைந்து இன்இசை பாடுவார்பால் மன்னினர், மன்னி இருந்த ஊர்ஆம்—
கொந்து அணையும் குழலார் விழவில் கூட்டம் இடைஇடை சேரும் வீதி,
பந்து அணையும் விரலார்தம்— ஆவூர்ப் பசுபதியீச்சுரம் பாடு, நாவே!

5. His matted hair sports a crescent; the Bull is His mount;
He will rid me of my current embodiment;
He abides in them that seek Him with sweet music;
Āvūr is His aeviternal town.
O tongue, hymn Pasupatiēcchuram
at Āvūr where damsels whose curly tresses
are decked with flower-clusters
and whose fingers sport the (flower) balls.
These foregather in the streets of Āvūr
during festivals, forming variform groups.

6. குற்றம் அறுத்தார், குணத்தின் உள்ளார், கும்பிடுவார்தமக்கு அன்பு செய்வார்,
ஒற்றை விடையினர், நெற்றிக்கண்ணார், உறைபதி ஆகும்— செறி கொள் மாடம்
சுற்றிய வாசலில் மாதர் விழாச் சொல் கவி பாட, நிதானம் நல்க,
பற்றிய கையினர், வாழும்— ஆவூர்ப் பசுபதியீச்சுரம் பாடு, நாவே!

6. He annuls the flaws of His servitors;
He is poised in Virtue; His mount is the peerless Bull;
He sports an eye in His forehead.
Āvūr is the polis where He resides.
O tongue, hymn Pasupatiēcchuram at Āvūr
where close to the thresholds of storeyed mansions,
damsels melodise festive hymns;
to reward them, patrons hold gold in their hands;
such munificent givers dwell here.

7. நீறு உடையார், நெடுமால் வணங்கும் நிமிர்சடையார், நினைவார்தம் உள்ளம்
கூறு உடையார், உடைகோவணத்தார், குவலயம் ஏத்த இருந்த ஊர்ஆம்—
தாறு உடை வாழையில் கூழைமந்தி தகு கனி உண்டு மிண்டிட்டு, இனத்தைப்
பாறிடப் பாய்ந்து பயிலும்— ஆவூர்ப் பசுபதியீச்சுரம் பாடு, நாவே!

7. He is bedaubed with the holy ash; He, the One
of dense matted hair, is adored by Vishnu;
He indwells those that meditate on Him;
He (but) wears a loin-cloth.
Āvūr is the town where He dwells, hailed by the world.
O tongue, hymn Pasupatiēcchuram at Āvūr
where a female monkey that eats the ripe fruits galore
from the hands of the dwarf-banana tree,
grows so turbulent that it leaps on its herd
which flees away helter-skelter.

8. வெண்தலைமாலை விரவிப் பூண்ட மெய் உடையார், விறல் ஆர் அரக்கன்
வண்டு அமர் பூ முடி செற்று உகந்த மைந்தர், இடம்— வளம் ஓங்கி, எங்கும்
கண்டவர், சிந்தைக் கருத்தின் மிக்கார், “கதி அருள்!” என்று கை ஆரக் கூப்பி,
பண்டு அலர் கொண்டு பயிலும்— ஆவூர்ப் பசுபதியீச்சுரம் பாடு, நாவே!

8. He wears a garland of white skulls and other wreaths;
He is the puissant One who crushed the heads
of the martial Rākshasa,
bedecked with chaplets buzzed by bees.
All-uberous Āvūr is the place,
where seers eye Him everywhere, contemplate Him
with surpassing concentration, adore Him
with folded hands, offer unto Him fruits and flowers

and implore Him thus: "O Lord! Be pleased
to bless us with salvation."
O tongue, sing and hail His Pasupatiēcchuram!

9. மாலும் அயனும் வணங்கி நேட, மற்று அவருக்கு எரி ஆகி நீண்ட,
சீலம் அறிவு அரிதுஆகி நின்ற, செம்மையினார்அவர் சேரும் ஊர்ஆம்—
கோல விழாவின் அரங்குஅது ஏறி, கொடிஇடை மாதர்கள் மைந்தரோடும்
பால் எனவே மொழிந்து ஏத்தும்— ஆவூர்ப் பசுபதியீச்சுரம் பாடு, நாவே!

9. He is the perfect One of incomprehensible excellence,
who, when adored and quested by
Vishnu and Brahma, soared up and up
as a column of fire, beyond their reach.
Āvūr is the place sanctified by
the presence of the salvific One.
O tongue, hymn His Pasupatiēcchuram at Āvūr
where during festivals, the liana-waisted women
ascend the forum with their valiant spouses
and hail Him in words sweet as milk.

10. பின்னிய தாழ்சடையார், பிதற்றும் பேதையர்ஆம் சமண்சாக்கியர்கள்
தன்இயலும்(ம்) உரை கொள்ளகில்லாச் சைவர், இடம்— தளவு ஏறு சோலைத்
துன்னிய மாதரும் மைந்தர் தாமும் சுனைஇடை மூழ்கி, தொடர்ந்த சிந்தைப்
பன்னிய பாடல் பயிலும்— ஆவூர்ப் பசுபதியீச்சுரம் பாடு, நாவே!

10. The plaited strands of His matted hair are a-dangle;
Āvūr is the place where the Ānādi Saiva abides;
He ignores the fools – the Samanas and the Buddhists –,
who but blabber balderdash.
O tongue, hymn His Pasupatiēcchuram at Āvūr
in the pools of which situate in its gardens
thrive *mullai* creepers galore,
women bathe with their spouses and proceed
to the shrine singing psalms,
with their mind solely set on the Lord-God.

11. எண்திசையாரும் வணங்கி ஏத்தும் எம்பெருமானை, எழில் கொள் ஆவூர்ப்
பண்டு உரியார் சிலர்தொண்டர் போற்றும் பசுபதியீச்சுரத்து ஆதிதன்மேல்,
கண்டல்கள் மிண்டிய கானல் காழிக் கவுணியன்— ஞானசம்பந்தன்— சொன்ன
கொண்டு, இனிதா இசை பாடி ஆடிக் கூடுமவர் உடையார்கள், வானே.

11. Gnānasambandhan, the Kauniya of littoral Kāzhi
rich in fragrant screwpines,
hath sung of the Lord-God who is hailed by the gods

of the octad of cardinal points.
He, the Alpha, is enshrined in beautiful Pasupatiēcchuram
hailed by the few blessed, traditional servitors of Āvūr.
Heaven is theirs that gather to recite
these hymns melodiously, and dance.

Notes

1. Tongue: It is regarded as sacred. The tongue is the seat of Goddess Saraswati. Again the tongue is both gnānendriya and karmendriya.

2. Moksha: The bliss of release (emancipation) from the cycle of transmigration.

Āppu: Mayilāppu which is Mylapore.

3. dear to Lakshmi: Āvūr is a polis of foison and plenty.

5. flower-balls: Girls and lasses in ancient Tamil Nadu used flower-balls when they played.

10. St. Sambandhar refers to Siva as a Saiva. Siva is indeed the Anādi Saiva (aeviternal Saivite).

mullai: jasmine.

9. Tiruvenupuram

Returning from his pilgrimage of Tondai-Nādu, when the boy-saint beheld Sikāzhi which is Venupuram, from a distance, he got down from his palanquin and sang the following decad.

9. திரு வேணுபுரம்

பண்: நட்டபாடை

1. வண்டு ஆர் குழல் அரிவையொடு பிரியா வகை பாகம்
பெண்தான் மிக ஆனான், பிறைச் சென்னிப் பெருமான், ஊர்—
தன் தாமரைமலராள் உறை தவளந்(ந்) நெடுமாடம்
விண் தாங்குவ போலும்(ம்) மிகு— வேணுபுரம் அதுவே.

1. The Lord-God who sports a crescent in His crest
is inseparably concorporate with Her
whose (flowery) locks are buzzed by bees.
In sooth, His left-half is wholly a Woman's.
Behold His town Venupuram where abides for ever
the goddess enthroned on the cool Lotus.
Its lofty and white and radiant mansions
look as though they bear the weight of the sky.

2. படைப்பு(ந்), நிலை, இறுதி, பயன், பருமையொடு, நேர்மை,
கிடைப் பல்கணம் உடையான், கிறி பூதப்படையான், ஊர்—
புடைப் பாளையின் கமுகி(ன்)னொடு புன்னைமலர் நாற்றம்
விடைத்தே வரு தென்றல் மிகு— வேணுபுரம் அதுவே.

2. He is Creation, Sustenance and Absorption;
He is the ultimate fruit that is *moksha*;
His is vastitude as well as subtlety;
His are the Hosts that recite the Vedas;
He is the Lord of the Bhūta-Hosts that enact gramarye;
Behold His town Venupuram in the sides of which
the southerly wafts in all its grandeur,
laden with the blended fragrance of the burst
spathes of areca trees and *punnai* flowers.

3. கடம் தாங்கிய கரியை அவள் வெருவ உரி போர்த்து,
படம் தாங்கிய அரவக்குழைப் பரமேட்டிதன் பழ ஊர்—
நடம் தாங்கிய நடையார், நல பவளத்துவர்வாய், மேல்
விடம் தாங்கிய கண்ணார், பயில்— வேணுபுரம் அதுவே.

3. He tore and wore the hide of the musty tusker
at which is *munis* shuddered;

Hooded serpents form His ear-pendants.
Behold the Supreme One's hoary Venupuram
where thrive lovely lasses of ruddy and coralline lips
above which are their eyes – the abode of poison –;
their stately gait is truly a dance.

4. தக்கன்தன சிரம் ஒன்றினை அரிவித்து, அவன்தனக்கு
மிக்க(வ்) வரம் அருள்செய்த எம் விண்ணோர் பெருமான் ஊர்—
பக்கம் பலமயில் ஆடிட, மேகம் முழவுஅதிர,
மிக்க(ம்) மது வண்டு ஆர் பொழில்— வேணுபுரம் அதுவே.

4. He had Daksha decapitated; then He granted him
many a boon; He indeed is the Lord of gods.
Behold His town in the sides of which
clouds rumble and peacocks dance.
It is Venupuram dight with gardens
where bees galore buzz and sip honey.

5. நானாவித உருவான், நமை ஆள்வான், நணுகாதார்
வான் ஆர் திரி புரம்மூன்று எரியுண்ணச் சிலை தொட்டான்,—
தேர் ஆர்ந்து எழு கதலிக்கனி உண்பான் திகழ் மந்தி
மேல் நோக்கி நின்று இரங்கும் பொழில்— வேணுபுரம் அதுவே.

5. He, our Ruler, assumes a good many forms;
He touched His bow and gutted with fire
the three, hostile citadels that winged the sky;
Behold His town Venupuram where, in its garden
a female monkey driven by a longing to eat
the melliferous bananas of a lofty plantain-tree
futilely looks at it and sore languishes.

6. விண்ணோர்களும் மண்ணோர்களும் வெருவி(ம்) மிக அஞ்ச,
கண் ஆர் சலம் மூடிக் கடல் ஓங்க(வ்), உயர்ந்தான் ஊர்—
தண் ஆர் நறுங்கமல(ம்) மலர் சாய(வ்), இள வாளை
விண் ஆர் குதிகொள்ளும்— வியன் வேணுபுரம் அதுவே.

6. When the great Deluge sweeps,
the dwellers of the world and the celestials
quake and shudder with utter dread;
the whole universe sinks under the seas
which spread everywhere.
Behold His lofty town untouched by the Deluge!
It is indeed spacious Venupuram
in the pools of which, the cool and fragrant lotuses bend
and the young *vālai* leap heavenward.

7. This verse is not traceable.

8. மலையான்மகள் அஞ்ச(வ்), வரை எடுத்த(வ்) வலி அரக்கன்
தலைதோள்அவை நெரியச் சரண்உகிர் வைத்தவன்தன் ஊர்—
கலைஆறொடு சுருதித்தொகை கற்றோர் மிகு கூட்டம்
விலைஆயின சொல்— தேர்தரு— வேணுபுரம் அதுவே.

8. When the mighty Ravana uprooted the Mountain
at which the Daughter of Himavant grew scared,
The Lord so pressed the tip of His toe that
his heads and shoulders got crushed.
Behold His town Venupuram where the great assembly
of those that are valiant in the ramiferous Vedas
and their six Angas,
exercise themselves to gain the import
of the words of incalculable worth.

9. வயம் உண்ட அ(ம்)மாலும்(ம்) அடி காணாது அலமாக்கும்,
பயன் ஆகிய பிரமன்படுதலை ஏந்திய பரன் ஊர்—
கயம் மேவிய சங்கம் தரு கழி விட்டு, உயர் செந்நெல்
வியல் மேவி, வந்து உறங்கும் பொழில் — வேணுபுரம் அதுவே.

9. Even Vishnu of victorious *tapas* who devoured the world,
stood bewildered, unable to behold His feet.
He, the Lord-God of Venupuram holds
the skull of Brahma, the giver of guerdons.
Behold the beauteous Venupuram where the chanks
of the deep waters through the creek
pass into the extensive fields teeming with
ruddy paddy-crops, and slumber (in peace).

10. மாசு ஏறிய உடலார் அமண்குழுக்க(ள்)ளொடு தேரர்,
தேசு ஏறிய பாதம் வணங்காமைத் தெரியான் ஊர்—
தூசு ஏறிய அல்குல்— துடிஇடையார், துணைமுலையார்,
வீசு ஏறிய புருவத்தவர்,— வேணுபுரம் அதுவே!

10. The Samana throngs of dirt-ridden bodies and the Buddhists
know not to adore His splendorous feet.
Behold His town Venupuram where flourish
the slender-waisted and full-bosomed lasses
whose *alkul-s* are veiled by soft and silken vestments,
and who set at nought the (furtive) glances
(of beholders) by the arching of their brows.

11. வேதத்துஒலியானும் மிகு வேணுபுரம் தன்னைப்
பாதத்தினில் மனம்வைத்து எழு பந்தன்தன பாடல்,
ஏதத்தினை இல்லா இவைபத்தும்(ம்), இவை வல்லார்
கேதத்தினை இல்லார், சிவகெதியைப் பெறுவாரே.

11. Bandhan who has installed in his mind the feet
of the Lord of Venupuram where,
for ever, abounds the chant of the Vedas,
hath sung these ten flawless verses.
They that can sing them melodiously
stand freed from misery; they will gain
salvation that is sempiternal.

Notes

1. Venupuram is one of the twelve names of Sikāzhi. Venu means bamboo. Scared of Surapadma, Indira hid himself in a bamboo in this place and performed Siva-puja.
2. Punnai: Alexandrian laurel.
3. Munis: The munis of Tārukāvanam who performed a sacrifice with intent to do away with Siva, in vain.
4. Daksha was decapitated by Vira Bhadra at the behest of Siva.
5. *Manti* is a female monkey and *kaduvan* is a male monkey.

   The emendation of Pandita Vidwan T.V. Gopala Ayyar (இரங்கி for இறங்கி) brings to light the plight of the unsuccessful monkey.
6. Vālai: Scabbard fish.
7. The Angas: The six texts that supply the key to the understanding of the Vedas.
8. Ruddy paddy: Sennel (Sambha-paddy).
9. Tudi idai: The waist that is like a small drum resembling an hour-glass.
10. Bandhan: Gnānasambandhan.

10. Tiruvannāmalai

Devotees standing on the hill of Araianinallūr pointed towards Tiruvannāmalai. The boy-saint beheld it. To him it appeared as the very Lord. He hailed it. He proceeded towards it singing the following decad.

10. திரு அண்ணாமலை

பண்: நட்டபாடை

1. உண்ணாமுலை உமையாளொடும் உடன்ஆகிய ஒருவன்,
பெண்ஆகிய பெருமான், மலை— திரு மா மணி திகழ,
மண் ஆர்ந்தன அருவித்திரள் மழலை(ம்) முழவுஅதிரும்—
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வணம் அறுமே.

1. He, the unique One, is concorporate with Uma
of unsuckled breasts;
The androgynic Lord has as His Hill, Annāmalai
the cataracts of which resound like babbling drums
the while bringing down to earth great and bright gems.
They that adore it will, for sure, be freed from their *karma*.

2. தேமாங்கனி கடுவன் கொள விடு கொம்பொடு தீண்டி,
தூ மா மழை துறுகல்மிசை சிறுநுண்துளி சிதற,
ஆமாம்பிணை அணையும் பொழில் அண்ணாமலை அண்ணல்
பூ மாங் கழல் புனை சேவடி நினைவார் வினை இலரே.

2. As a male monkey plucked a delicious mango fruit,
the branch sprang back and hit a pure-watered nimbus
that began to scatter on the hill droplets of water,
at which the jungle kine barged into the groves
with their mates.
Such indeed is Annāmalai.
They that meditate on the flower-bedecked
and ankleted feet of the great Lord
of this shrine, stand rid of their *karma*.

3. பீலி(ம்)மயில் பெடையோடு உறை பொழில் சூழ் கழை முத்தம்
சூலி(ம்) மணி தரைமேல் நிறை சொரியும் விரி சாரல்,
ஆலி(ம்) மழை தவழும் பொழில் அண்ணாமலை அண்ணல்
காலன் வலி தொலை சேவடி தொழுவாரன புகழே.

3. In its groves fan-tailed peacocks live with their hens;
the ground here is resplendent with pearls rained by
bamboos and delivered by gravid chanks;
from its slopes rain-drops roll down and flow.

Such indeed is Annāmalai of the great Lord
who kicked Death to death.
Renown is theirs that adore its Lord's salvific feet.

4. உதிரும் மயிர் இடு வெண்தலை கலனா, உலகுஎல்லாம்
எதிரும் பலி உணவுஆகவும், எருது ஏறுவதுஅல்லால்,
முதிரும் சடை இளவெண்பிறை முடிமேல் கொள, அடிமேல்
அதிரும் கழல் அடிகட்கு இடம்— அண்ணாமலை அதுவே.

4. He receives alms from all the regions in His bowl
of a white, hairless skull, from willing givers,
and eats it as His victuals.
He also rides the Bull; in His aging matted hair
He wears a young and white crescent.
He is decked with resounding anklets.
Behold His polis – Annāmalai!

5. மரவம், சிலை, தரளம், மிகு மணி, உந்து வெள்அருவி
அரவம் செய, முரவம் படும் அண்ணாமலை அண்ணல்
உரவம் சடை உலவும் புனல் உடன்ஆவதும் ஓரார்,
குரவம் கமழ் நறுமென்குழல் உமை புல்குதல் குணமே.

5. In Tiruvannāmalai, the roaring and white cataracts
roll down uproariously with gems and pearls,
and logs of *maravam* and *silai*.
The Lord of Annāmalai takes no note of the flood
on His matted hair where the serpent meanders.
He hugs Uma whose soft and odoriferous locks
are decked with suaveolent *kuravam*.

6. பெருகும் புனல் அண்ணாமலை, பிறை சேர், கடல் நஞ்சைப்
பருகும்தனை துணிவார், பொடி அணிவார், அது பருகிக்
கருகும் மிடறு உடையார், கமழ் சடையார், கழல் பரவி
உருகும் மனம் உடையார்தமக்கு உறு நோய் அடையாவே.

6. He, the Lord of Annāmalai, sports an ever-swelling
flood on His crest where rests the crescent.
He durst quaff the oceanic venom by which
His throat had grown murky.
He is adorned with the holy ash; His matted hair is olent.
They that praise His ankleted feet with melting minds
will no longer suffer from the malady of re-birth.

7. கரி காலன, குடர் கொள்வன, கழுது ஆடிய காட்டில்
நரி ஆடிய நகுவெண்தலை உதையுண்டவை உருள,
எரிஆடிய இறைவர்க்கு இடம்— இனவண்டு இசை முரல,
அரி ஆடிய கண்ணாளொடும் அண்ணாமலை அதுவே.

7. Their legs are charred; they eat the entrails;
they are the ghouls that dance in the crematory.
There, the white skulls that seem to smile,
are kicked and tossed about by jackals.
The place of the Lord-God who dances in the fire
(of the funeral pyre)
and who is concorporate with His Consort
whose eyes are streaked red,
is indeed Annāmalai – the habitat
of humming bees, beetles, chafers and the like.

8. ஒளிறூ புலிஅதள்ஆடையன், உமை அஞ்சுதல்பொருட்டால்,
பிளிறூ குரல் மதவாரணம் வதனம் பிடித்து உரித்து,
வெளிறூபட விளையாடிய விகிர்தன்; இராவணனை
அளறூபட அடர்த்தான்; இடம்— அண்ணாமலை அதுவே.

8. He is clad in a bright tiger-skin;
as Uma was scared, He, the *Vikirtan*, caught
the musty and trumpeting tusker by its visage,
and tore off its hide as though it were but a play.
He so crushed Ravana that he was reduced to pulp.
His polis is indeed Annāmalai!

9. விளவு ஆர் கனி பட நூறிய கடல்வண்ணனும், வேதக்
கிளர் தாமரைமலர்மேல் உறை கேடு இல் புகழோனும்,
அளவா வணம் அழல் ஆகிய அண்ணாமலை அண்ணல்—
தளராமுலை, முறுவல்(ல்) , உமை தலைவன்(ன்)— அடி சரணே!

9. The feet of the Lord-God of Annāmalai who is
the Consort of Uma whose visage is ever
lit with a smile and whose breasts never sag,
are indeed our refuge.
The Lord rose up as a column of fire
whose base and top grew beyond the search
of him whose hue is cerulean and who smote
the Asura that stood disguised as a wood-apple tree,
and the Master of the Vedas – the one of endless fame
whose seat is the resplendent Lotus.

10. வேர் வந்துஉற, மாசு ஊர்தர, வெயில் நின்று உழல்வாரும்,
மார்வம் புதை மலி சீவரம் மறையா வருவாரும்,
ஆரம்பர்தம் உரை கொள்ளன்மின்! அண்ணாமலை அண்ணல்,
கூர்வெண்மழுப்படையான், நல கழல் சேர்வது குணமே!

10. They roam in the sun, sudate and get dirtied.
These and those that veil their chests with the bark of trees
are but abecedarians; hearken not to their words.
It is salvific and it spells good to gain
the weal-conferring and ankleted feet
of the great Lord of Annāmalai
who wields a sharp and white *mazhu*.

11. வெம்பு உந்திய கதிரோன் ஒளி விலகும் விரிசாரல்,
அம்பு உந்தி மூஎயில் எய்தவன் அண்ணாமலை அதனை,
கொம்பு உந்துவ, குயில் ஆலுவ, குளிர் காழியுள் ஞான—
சம்பந்தன தமிழ் வல்லவர் அடி பேணுதல் தவமே.

11. The extensive slopes of Annāmalai averruncate
the piercing pins of the sun's light.
The Lord-God smote with a dart the three hostile citadels.
To adore the feet of them that have mastered
these Tamil verses of Sambandhan
of cool and serene Kāzhi where
trumpets blare and kuyils melodise,
is indeed *tapas* true.

Notes

1. Annāmalai: It means: 'the Mountain which is unapproachable.'
It is said that it is the very form of Siva.
2. Āmān: The jungle-cow.
3. Death: The god Yama.
4. alms: Symbolic of love.
5. maravam: Indian oak.
Silai (cilai): a jungle-tree.
Kuravam (Kura): common bottle-flower.
9. This verse is the sthala-purana of Annāmalai, in little.
The Asura: Kapitthan. Vide Srimad Bhagawatam.

11. Tiruvēzhimizhalai

The boy-saint visited Tiruvēzhimizhalai with St. Appar. It was here he sang the following decad.

11. திரு வீழிமிழலே

பண்: நட்டபாடை

1. சடை ஆர் புனல் உடையான், ஒரு சரி கோவணம் உடையான்,
படை ஆர் மழு உடையான், பலபூதப்படை உடையான்,
மடமான்விழி உமைமாது இடம் உடையான், எனை உடையான்,
விடை ஆர் கொடி உடையான், இடம்— வீழி(ம்)மிழலையே.

1. A flood courses in His matted hair;
He wears a sliding loin-cloth;
His weapon is a *mazhu*.
He is the Lord of the *Bhūta*-Hosts numberless.
In His left half abides His Consort,
the bashful, fawn-eyed Uma.
He owns me.
His banner sports the Bull.
Vēzhimizhalai is indeed His urbs.

2. ஈறுஆய், முதல் ஒன்றுஆய், இரு பெண் ஆண், குணம்மூன்றுஆய்,
மாறா மறைநான்குஆய், வரு பூதம்(ம்) அவை ஐந்துஆய்,
ஆறு ஆர் சுவை, ஏழ்ஓசையொடு எட்டுத்திசைதான் ஆய்,
வேறுஆய், உடன்ஆனான், இடம்— வீழி(ம்)மிழலையே.

2. He is the end; He is the sole beginning;
He is two: man and woman; His *gunas* are three;
He is the four Vedas among which there is conflict none;
He is the five evolving elements;
He is the sextuple taste;
He is the sevenfold music;
He is the eight directions.
He is different; He is the One who is one with all entia.
Vēzhimizhalai is indeed His urbs.

3. வம்மின்(ன்), அடியீர், நாள்மலர் இட்டுத் தொழுது உய்ய!
உம் அன்பினொடு எம் அன்பு செய்து, ஈசன்(ன்) உறை கோயில்—
மும்மென்று இசை முரல் வண்டுகள் கெண்டித் திசை எங்கும்
விம்மும் பொழில் சூழ் தண்வயல் — வீழி(ம்)மிழலையே.

3. The Lord accepts your love as well as ours;
Come ye servitors to gain salvation

by adoring the Lord with fresh-blown flowers.
The shrine of our Lord is at Vēzhimizhalai
girt with cool fields and gardens
where humming bees kindle the flowers
and wing in all the eight directions.

4. பண்ணும், பதம்ஏழும், பலஓசைத் தமிழ்அவையும்,
உள்– நின்றது ஓர் சுவையும்(ம்), உறு தாளத்து ஒலிபலவும்,
மண்ணும், புனல், உயிரும், வரு காற்றும், சுடர்மூன்றும்,
விண்ணும், முழுதுஆனான் இடம்– வீழி(ம்)மிழலையே.

4. He is music, its constituent and basic notes seven,
the manifold melody of multifarious Tamil songs,
their inly-abiding relish
as well as the rhythms galore of tālam.
His are the forms of earth, water, life, air, fire,
sun, moon and the heaven.
Vēzhimizhalai is the urbs where He abides.

5. ஆயாதன சமயம்பல அறியாதவன், நெறியின்
தாய்ஆனவன், உயிர்கட்கு முன் தலைஆனவன், மறை முத்–
தீஆனவன், சிவன், எம் இறை, செல்வத் திரு ஆரூர்
மேயான்அவன், உறையும்(ம்) இடம்– வீழி(ம்)மிழலையே.

5. He is unknown to many a faith
not founded on actual experience.
He is the Mother of the true way, the aeviternal Lord
of souls; He is the triple Vedic fire;
He is Siva, our Lord-God, the One that abides
at opulent Tiruvārūr.
Vēzhimizhalai is indeed His urbs.

6. "கல்லால் நிழல்கீழாய்! இடர் காவாய்!" என வானோர்–
எல்லாம் ஒரு தேர்ஆய், அயன் மறை பூட்டி நின்று உய்ப்ப,
வல்லாய் எரி காற்று ஈர்க்கு, அரி கோல், வாசுகி நாண், கல்–
வில்லால் எயில் எய்தான் இடம்– வீழி(ம்)மிழலையே.

6. The Lord-God was poised in yoga
under the Kallāla tree.
The celestials implored Him thus: "O Lord,
save us from troubles" and formed themselves
into a chariot to which the charioteer Brahma
yoked the Vedas as its steeds, and drove it.

The Lord held Mount Meru as His bow;
Vasuki was its string, Vishnu its dart,
Vāyu its feathers and Agni the tip of the dart.
Lo, Vēzhimizhalai is His urbs.

7. கரத்தால் மலி சிரத்தான்; கரி உரித்து ஆயது ஓர் படத்தான்;
புரத்தார் பொடிபட, தன் அடி பணி மூவர்கட்கு ஓவா
வரத்தான் மிக அளித்தான்; இடம்— வளர் புன்னை முத்துஅரும்பி,
விரைத் தாது பொன் மணி ஈன்று, அணி— வீழி(ம்)மிழலையே.

7. His hand holds a skull; He peeled the hide
of a tusker and stood mantled in it;
He smote the citadels; He conferred everlasting boons
on the Three that hailed His feet.
His urbs is indeed Vēzhimizhalai,
rich in *punnai* flowers which bloom like pearls,
blow with golden pollen, and growing ripe
yield green gems.

8. முன் நிற்பவர் இல்லா முரண் அரக்கன், வடகயிலை—
தன்னைப் பிடித்து எடுத்தான், முடி தடந்தோள் இற ஊன்றி,
பின்னைப் பணிந்து ஏத்த, பெரு வாள் பேரொடும் கொடுத்த
மின்னின் பொலி சடையான் இடம்— வீழி(ம்)மிழலையே.

8. When the peerless Rakshasa uprooted
and lifted up Mount Kailas in the north,
He crushed the strength out of his heads
and mighty shoulders, by pressing His toe;
then when he rued and hailed Him
He blessed him with renown, besides
gifting to him a mighty sword.
Vēzhimizhalai is indeed the urbs of the Lord
of fulgurant and matted hair.

9. பண்டு ஏழ்உலகு உண்டான், அவை கண்டானும், முன் அறியா
ஒண்தீஉரு ஆனான் உறை கோயில்— நிறை பொய்கை
வண் தாமரைமலர்மேல் மடஅன்னம் நடை பயில,
வெண்தாமரை செந் தாது உதிர்— வீழி(ம்)மிழலையே.

9. Behold the shrine of Him who grew into a lofty
column of bright fire beyond the ken
of the one who devoured the seven worlds,
and the one who creatd them.

His urbs is Vēzhimizhalai in the natural pools
of which teem bountiful lotuses;
as over these, bashful swans practise
their stately gait,
the white lotuses spill ruddy pollen.

10. மசங்கல் சமண், மண்டைக் கையர், குண்டக் குணம்இலிகள்,
இசங்கும் பிறப்பு அறுத்தான் இடம்— இருந்தேன் களித்து இரைத்து,
பசும்பொன்கிளி களி மஞ்ஞைகள் ஒளி கொண்டு எழு பகலோன்
விசும்பைப் பொலிவிக்கும் பொழில்— வீழி(ம்)மிழலையே.

10. Befuddled indeed are the Samanas;
their gowpens serve as their begging-bowls;
these (and the Buddhists) are the base ones
who are devoid of virtue.
Behold the shrine of Him that does away
with re-birth – the outcome of *karma*.
It is Vēzhimizhalai which is His urbs
where the plump bees bombinate in joy
and where the green-feathered and pretty parakeets
and the peafowls too, gladly sport in its gardens
that augment the beauty of the heavens
where shines the resplendent sun.

11. வீழி(ம்)மிழலை(ம்) மேவிய விகிர்தன்தனை, விரை சேர்
காழி(ந்) நகர் கலை ஞானசம்பந்தன் தமிழ்பத்தும்
யாழின்(ன்) இசை வல்லார், சொலக் கேட்டார், அவர்எல்லாம்
ஊழின் மலி வினை போயிட, உயர்வான் அடைவாரே.

11. They that sing and play on the *yāzh* these
ten hymns composed by Gnānasambandhan
of incense-breathing Kāzhi,
who is well-versed in the scriptures
and who in this decad has celebrated
the *Vikirtan* of Vēzhimizhalai
and those that hearken to its musical rendering,
will be rid of the resultants of their kismet.
These will assuredly gain the Empyrean.

Notes

1. urbs: a city.

2. The figure employed in this verse is known as 'enn alangkāram.' Numbers 1 to 8 are employed in this verse. Siva is the only one that remains when the cosmos is swept away by the Great Deluge. Through this Deluge, Siva absorbs everything into Himself. Since He alone is at the dissolution of the cosmos, it is He who re-creates it.

   He is two: Siva is Ammai-Appar, the Lord-God who is Mother as well as Father.

4. Siva is not only the Lord of the sevenfold Dance but is also the Lord of the sevenfold music.

   In Saivism, life and soul are synonyms.

   Siva is Ashta Mūrti. The ashtam (octad) comprises the five elements, the soul as also the sun and the moon.

5. This hymn affirms that any faith should stand the test of experience.

6. Kallāla tree: The banyan tree that has no stilt-roots. It is peculiarly sacred to Siva.

   Vāyu: The wind-god.

   This hymn affirms the truth that all gods serve but Siva.

7. The three that escaped the destruction of the three citadels are named Tārakākshan, Kamalākshan and Vidyunmāli. They were respectively renamed as Sudharman, Suniti and Subuddhi when they were made the ostiaries of Mount Kailas.

8. Per (பேர்) : It also means name. The Rakshasa came to be known as Ravana as his lamentation was vociferous when he stood crushed by Mount Kailas. The sword he received from Siva is known as Chandrahāsa.

12. Tiumuthukundram

Adoring at many shrines, the boy-saint proceeded to Tirumuthukundram. On his way to the holy place he sang the following decad.

12. திரு முதுகுன்றம்

பண்: நட்டபாடை

1. மத்தா வரை நிறுவி, கடல் கடைந்து, அவ் விடம் உண்ட
தொத்து ஆர்தரு மணி நீள் முடிச் சுடர்வண்ணனது இடம்ஆம்—
கொத்து ஆர் மலர், குளிர்சந்து, அகில், ஒளிர்குங்குமம், கொண்டு
முத்தாறு வந்து அடி வீழ்தரு— முதுகுன்று அடைவோமே.

1. Of yore, when the sea was churned with the mountain
serving as the churning stick,
venom welled up and He ate it.
Behold the shrine of the radiant One whose lofty
and gemmy crown is decked with flower-clusters!
Let us reach Muthukundru where the river Mutthāru
pays obeisance to the feet of the Lord-God
and flows on carrying with it bunches of flowers,
cool sandalwood, eaglewood and also
bright logs of *kunkuma* trees.

2. தழை ஆர் வடவிடவீதனில் தவமே புரி சைவன்,
இழை ஆர் இடை மடவாளொடும், இனிதா உறைவுஇடம்ஆம்—
மழை வான்இடை முழவ(வ்), எழில் வளைவாள்உகிர், எரிகண்,
முழை வாள்அரி குமிறும்(ம்) உயர்— முதுகுன்று அடைவோமே.

2. He, the Saiva, performs *tapas* seated under
the leafy Banyan tree.
He abides here in His shrine with His
bashful Consort of bejewelled hips.
Let us fare forth and reach the lofty Muthukundru
where, when nimbi rumble on high
the cave-dwelling, fiery-eyed lion
of bright and beautiful and curved toe-nails, roars.

3. விளையாதது ஓர் பரிசில் வரு பசுபாசவேதனை, ஒண்
தளை ஆயின தவிர(வ்), அருள் தலைவ(ன்)னது சார்புஆம்—
களை ஆர்தரு கதிர் ஆயிரம்உடைய(வ்) அவனோடு
முளை மா மதி தவழும்(ம்) உயர்— முதுகுன்று அடைவோமே.

3. It is here the Lord of Grace abides to uproot
the perversely peerless fetters and cause the soul's
recurring misery bred by *pāsam* to get extinct.
Let us fare forth and reach the lofty Muthukundru
over which the myriad-rayed sun shines
and the sprouting crescent crawls.

4. சுரர், மா தவர், தொகு கின்னரர் அவரோ, தொலைவு இல்லா
நரர்ஆன பல்முனிவர், தொழ இருந்தான் இடம்— நலம் ஆர்
அரசார் வர அணி பொன்கலன்அவை கொண்டு பல்— நாளும்
முரசு ஆல்வரு மண மொய்ம்பு உடை— முதுகுன்று அடைவோமே.

4. To adore Him, here gather Devas, *tapaswis* great,
Kinnaras and the mighty *munis* of earth.
The town is visited by princes who are
received with jewels of gold and the drums
that proclaim their advent resound here
on many many days.
Such is Muthukundru to which we hie to reach it.

5. அறை ஆர் கழல் அந்தன்தனை, அயில் மூஇலை, அழகு ஆர்—
கறை ஆர் நெடுவேலின்மிசை ஏற்றான் இடம் கருதில்,
மறைஆயினபல சொல்லி, ஒண்மலர்சாந்து அவை கொண்டு,
முறையால் மிகும் முனிவர் தொழும் முதுகுன்று அடைவோமே.

5. Behold the shrine of Him who ganched Antakan
of dreadfully resounding anklets, with His
furious and beauteous and sharp and long trident.
Let us fare forth and reach Muthukundru,
where, chanting many a Vedic mantra,
the munis poised in propriety, gather to adore
Him with bright flowers and sandal-paste.

6. ஏ ஆர் சிலை எயினன்(ன்)உரு ஆகி, எழில் விசயற்கு
ஓவாத இன்அருள் செய்த எம் ஒருவற்கு இடம் — உலகில்
சாவாதவர், பிறவாதவர், தவமே மிக உடையார்,
மூவாத பல்முனிவர், தொழும் — முதுகுன்று அடைவோமே.

6. Behold the shrine of the non-pareil God,
who assuming the guise of a forester, equipped
with a bow and arrows (vanquished) the handsome
Arjuna and blessed him with limitless and sweet grace.
Let us fare forth and reach Muthukundru adored by
the deathless and the birthless and also
the great *tapaswis* and the unaging *munis* galore.

7. தழல் சேர்தரு திருமேனியர், சசி சேர் சடைமுடியர்,
மழ மால்விடை மிக ஏறிய மறையோன், உறை கோயில்—
விழவோடு ஒலி மிகு மங்கையர், தகும் நாடகசாலை
முழவோடு இசை நடம் முன் செயும் — முதுகுன்று அடைவோமே.

7. Behold the shrine of Him whose divine frame dazzles
like flame; His matted crest sports a crescent;
He, the Author of the Vedas, rides a young and huge Bull.
Let us fare forth and reach Muthukundru where
in its dancing halls, during festivals,
women of jingling anklets sing accompanied
by drums and enact their dance.

8. செது வாய்மைகள் கருதி(வ்) வரை எடுத்த திறல் அரக்கன்
கதுவாய்கள்பத்து அலறீயிடக் கண்டான் உறை கோயில்—
மது வாய செங்காந்தள்மலர் நிறைய, குறைவு இல்லா
முதுவேய்கள் முத்து உதிரும் பொழில் — முதுகுன்று அடைவோமே.

8. Behold the shrine of Him who caused the puissant
Rakshasa's ten mouths–intrenched with scars –,
to cry aloud, when impelled by his own bumptious words
of sheer bravado, he lifted up the mountain.
Let us fare forth and reach Muthukundru, rich in
gardens, where the flawless and aging bamboos
fill the melliferous *kāntall* with their pearls.

9. இயல் ஆடிய பிரமன்(ன்) அரி இருவர்க்கு அறிவு அரிய,
செயல் ஆடிய தீ ஆர்உரு ஆகி எழு செல்வன்—
புயல் ஆடுவண்பொழில் சூழ் புனல் படைப்பைத் தடத்து அருகே
முயல் ஓட, வெண்கயல் பாய்தரு — முதுகுன்று அடைவோமே.

9. Behold the shrine of the opulent One who rose up
as a cloumn of fire unknowable to the two
braggadocios – Vishnu and Brahma.
Let us fare forth and reach Muthukundru, girt with
bountiful gardens over which clouds sail,
and water-spreads from which white-bellied kayal
romp and leap, when hares run close by.

10. அருகரொடு புத்தர்அவர் அறியா அரன், மலையான்
மருகன், வரும் இடபக் கொடி உடையான், இடம்— மலர் ஆர்
கருகுகுழல் மடவார் கடிகுறிஞ்சி அது பாடி,
முருக(ன்)னது பெருமை பகர் — முதுகுன்று அடைவோமே.

10. Behold the shrine of Hara, the son-in-law
of the Mountain, the One whose flag sports the Bull,
the One unknowable to the Samanas and the Buddhists.
Let us fare forth and reach Muthukundru where damsels
of densely-dark tresses decked with flowers,
hail the Lord Muruka
in psalms cast in the *Kurinji-p-pann.*

11. முகில் சேர்தரு முதுகுன்று உடையானை(ம்), மிகு தொல்சீர்
புகலி(ந்) நகர் மறை ஞானசம்பந்தன்(ன்), உரைசெய்த
நிகர் இல்லன தமிழ்மாலைகள் இசையோடு இவைபத்தும்
பகரும்(ம்) அடியவர்கட்கு இடர், பாவம்(ம்), அடையாவே.

11. Neither trouble nor sin will get attached to the devotees
that tunefully recite these ten hymns –
the peerless garland of Tamil verses,
composed by Marai Gnānasambandhan
of Pukali –, the hoary city of glory, magnifying
the Lord of Muthukundru roofed of clouds.

Notes

1. Muthukundram/Muthukundru: The ancient hill. In Sanskrit it is known as Vriddāchala.

Kunkuma is saffron.

2. The Saiva: Siva who is known as Anādi Saiva.

3. Fetters: the three malas of Ānavam, Karma and Maya.

Pāsam: It means literally 'a rope.' The three malas constitute pāsam. Ānava mala is chiefly referred to by this word.

4. Kinnara: A celestial instrumentalist. He plays on the kinnara.

11. பார் ஆர் விடையான் பனையூர்மேல்
சீர் ஆர் தமிழ் ஞானசம்பந்தன்
ஆராத சொல்மாலைகள்பத்தும்
ஊர்ஊர் நினைவார் உயர்வாரே.

11. Glorious Tamizh-Gnānasambandhan hath sung,
in abounding love, of the shrine at Panaiyūr where
abides He whose mount is the Bull that can traverse the earth.
The dwellers of each and every town
who cultivate these hymns will grow lofty and sublime.

Notes

1. Panaiyur: The town of palm-trees.
3. a few: These are *anukkatthondar*. They are permanently attached to the temple-service.
4. Siva is alike hailed by the ruler and the ruled.
5. At Panaiyur, each day is a holy day.

6. close to Him: The Sivāchāryas are referred to here. They are the privileged ones that can enter the adytum to adore the Lord.
8. Siva is the Provider. It is He who confers *tanu, karanam, bhuvanam* and *bhogam* to all entia in keeping with their past *karma*.
9. Seekers of boons from Siva are happy devotees. It is the forlorn who invoke the minor gods.
10. The latter-day Samanas and Buddhists cultivated calumny as a fine art.
11. The boy-saint is every inch a Tamil saint. His hymns constitute the Tamil Veda.

38. Tirumayilāduthurai

The boy-saint bound for Mūvalūr arrived at Mayilāduthurai where he sang the following decad.

38. திருமயிலாடுதுறை

பண்: தக்கராகம்

1. கரவு இன்றி நல்மாமலர் கொண்டே
இரவும் பகலும் தொழுவார்கள்—
சிரம் ஒன்றிய செஞ்சடையான் வாழ்
வர மா மயிலாடுதுறையே.

1. The great and boon-conferring Mayilāduthurai is
His urbs where flourish devotees that know no deceit
and who adore, day and night, with their bowing heads,
the Lord of ruddy matted hair adorned with a chaplet,
with choice and fragrant flowers galore.

2. உர வெங்கரியின்(ன்)உரி போர்த்த
பரமன்(ன்) உறையும் பதி என்பர்—
குரவம், சுரபுன்னையும், வன்னி,
மருவும்(ம்) மயிலாடுதுறையே.

2. Mayilāduthurai rich in *kuravam, surapunnai*
and *vanni*, is His town where
the supreme Lord who is mantled in the hide
of the mighty and fierce tusker, is entempled.

3. ஊனத்து இருள் நீங்கிட வேண்டில்,
ஞானப்பொருள் கொண்டு அடி பேணும்—
தேன் ஒத்து இனியான் அமரும் சேர்வு
ஆனம்(ம்) மயிலாடுதுறையே!

3. If you seek to extirpate the murk of *mala*, hail
and foster His feet whose form is divine Gnosis.
The Lord-God is sweet as honey; He willingly abides
in His shrine at Mayilāduthurai.

4. அஞ்சு ஒண் புலனும்(ம்)அவை செற்ற
மஞ்சன் மயிலாடுதுறையை
நெஞ்சு ஒன்றி நினைந்து எழுவார்மேல்—
துஞ்சும், பிணிஆயினதானே.

4. He is the One that routed the pentad of senses
inhering in their organs; His shrine is at Mayilāduthurai.
The ills and illth of those that rise up resolved to adore it
in single-minded devotion, will become non est.

5. தணி ஆர் மதி செஞ்சடையான்தன்
அணி ஆர்ந்தவருக்கு அருள், என்றும்
பிணிஆயின தீர்த்து அருள்செய்யும்
மணியான், மயிலாடுதுறையே.

5. He wears on His ruddy, matted hair the cool moon;
He annuls their maladies and graces them
that seek His presence; He is the Ruby
of Mayilāduthurai where He is entempled.

6. தொண்டர் இசை பாடியும் கூடிக்
கண்டு துதிசெய்பவன் ஊர்ஆம்—
பண்டும் பலவேதியர் ஓத,
வண்டு ஆர் மயிலாடுதுறையே.

6. It is the town of Him where servitors gather,
sing, have His *darshan* and hail Him.
His shrine at Mayilāduthurai abounds in bees,
and Brahmins who as in the past, continue to chant the Vedas.

7. அணங்கோடு ஒருபாகம் அமர்ந்து
இணங்கி அருள்செய்தவன் ஊர்ஆம்—
நுணங்கும் புரிநூலர்கள் கூடி
வணங்கும் மயிலாடுதுறையே.

7. It is the town of Him, who concorporate
with the divine Woman, confers grace.
His shrine is at Mayilāduthurai where sages
of subtle and sublime intellect gather and adore Him.

8. சிரம் கையினில் ஏந்தி இரந்த
பரம் கொள் பரமேட்டி, வரையால்
அரங்க(வ்) அரக்கன் வலி செற்ற,—
வரம் கொள் — மயிலாடுதுறையே.

8. The Supreme One that holds a skull and begs alms
crushed the might out of the Rakshasa, caught

beneath the mountain; His shrine at Mayilāduthurai
showers boons on the devotees that seek them.

9. ஞாலத்தை நுகர்ந்தவன் தானும்,
கோலத்து அயனும், அறியாத
சீலத்தவன் ஊர் – சிலர் கூடி
மாலைத் தீர் மயிலாடுதுறையே.

9. It is the town of the splendorously glorious One
unknowable to him that devoured the world
and the wondrous Brahma; Mayilāduthurai is His
shrine where choice devotees gather and stand cured of their
tohubohu.

10. நின்று உண் சமணும், நெடுந் தேரர்,
ஒன்று அறியாமை உயர்ந்த
வென்றி அருள்ஆனவன் ஊர்ஆம்–
மன்றல் மயிலாடுதுறையே.

10. It is the town of the triumphant and lofty One –
all compact of grace –, unknowable to the Samanas
that eat standing as well as the tall Buddhists.
Mayilāduthurai, is indeed, His odoriferous shrine.

11. நயர் காழியுள் ஞானசம்பந்தன்
மயர் தீர் மயிலாடுதுறைமேல்
செயலால் உரைசெய்தனபத்தும்
உயர்வுஆம், இவை உற்று உணர்வார்க்கே.

11. Gnānasambandhan of Kāzhi where abide men
of lofty wisdom, hath sung of Mayilāduthurai
that annuls bewilderment.
These ten Grace-inspired verses confer greatness
on them that cultivate and comprehend them.

Notes

1. Mayilāduthurai means the ford where peacocks dance.
2. Kuravam: Common bottle-flower.
3. The murk of mala: The murky mala: The Ānava mala. It is Dame Darkness according to St. Umapati. It abides with the soul

beginninglessly. It is the denigrating principle from which the soul suffers. The effect of this mala can be rendered nugatory by the grace of Siva.

4. Pentad of senses: Sound, touch, form, essence and smell.

9. tohubohu: confusion bred of ignorance.

10. tall Buddhists: These stand like tall trees and their claims too are tall.

11. Grace-inspired verses: Afflatus is Siva-Sakti's gift to the boy-saint.

39. Tiruvetkalam

Having adored the Lord of Tillai, afraid to stay there at night, the boy-saint proceeded to Tiruvetkalam. Tillai is a sacred town. Only the Tillai Brahmins can dwell there. A person howsoever holy, will not venture to stay there during night. The following decad was sung in the holy polis of Tiruvetkalam.

39. திருவேட்களம்

பண்: தக்கராகம்

1. அந்தமும் ஆதியும்ஆகிய அண்ணல்— ஆர் அழல் அங்கை அமர்ந்து இலங்க;
மந்த முழவம் இயம்ப; மலைமகள் காண, நின்று ஆடி;
சந்தம் இலங்கு நகுதலை, கங்கை, தண்மதியம், அயலே ததும்ப;
வெந்தவெண்நீறு மெய் பூசும் — வேட்கள நன்நகராரே.

1. The great Lord is the Omega and the Alpha;
His beauteous hand holds the blazing fire;
He dances witnessed by the Daughter of the Mountain,
to the beat of *muzhavam*.
The Lord who bedaubs Himself with white, burnt ash
abides at Vetkalam – the great and goodly town –,
wearing on His crest a skull that seems to smile,
and the Ganga beside which the moist moon floats.

2. சடைதனைத் தாழ்தலும் ஏற முடித்து, சங்கவெண்தோடு சரிந்து இலங்க,
புடைதனில் பாரிடம் சூழ, போதரும்ஆறு இவர்போல்வார்—
உடைதனில் நால்விரல்கோவண ஆடை, உண்பதும் ஊர் இடு பிச்சை, வெள்ளை—
விடைதனை ஊர்தி நயந்தார் — வேட்கள நன்நகராரே.

2. His dangling matted hair is neatly bound to form
His crown; in His dangling ear-lobes are earings
wrought of white shell.
Thus He goes about followed by the *Bhutas* at His sides.
The breadth of His *kovanam* is four *inches*;
He eats the alms offered by the townsfolk;
He loves to ride a white Bull; He, indeed, is
the Lord of Vetkalam – the great and goodly town.

3. பூதமும் பல்கணமும் புடை சூழ, பூமியும் விண்ணும் உடன்பொருந்த,
சீதமும் வெம்மையும்ஆகி, சீரொடு நின்ற எம் செல்வர்—
ஓதமும் கானலும் சூழ்தரு வேலை, உள்ளம் கலந்து இசையால் எழுந்த
வேதமும் வேள்வியும் ஓவா, வேட்கள நன்நகராரே.

3. He is encircled by the *Bhūtas* and many *Ganas*
as well as the sages of earth and the celestials.
He, our opulent One who is poised in glory,
is coolth as well as heat.
He presides over the great and goodly town Vetkalam –
dight with pools and littoral gardens close to the sea –,
where sacrifices and the chanting of the Vedas
in soulful music, never cease.

4. அரை புல்கும் ஐந்தலை ஆடல் அரவம் அமைய வெண்கோவணத்தோடு அசைத்து,
வரை புல்கு மார்பில் ஓர் ஆமை வாங்கி அணிந்தவர்தாம்—
திரை புல்கு தெண்கடல் தண்கழி ஓதம் தேன் நல் அம் கானலில் வண்டு பண்செய்ய,
விரை புல்கு பைம்பொழில் சூழ்ந்த வேட்கள நன்நகராரே.

4. He wears a white *kovanam* and His waist is
cinctured with a five-headed serpent;
He wears on His hill-like chest a carapace.
His is the goodly town of Vetkalam which is
girt with fragrant and ever-green gardens
and melliferous groves,
on the banks of the cool creeks
of the sea where bees bombilate.

5. பண் உறு வண்டு அறை கொன்றைஅலங்கல், பால் புரை நீறு, வெண்நூல், கிடந்த
பெண் உறு மார்பினர்; பேணார் மும்மதில் எய்த பெருமான்;
கண் உறு நெற்றி கலந்த வெண்திங்கள்கண்ணியர்; விண்ணவர் கைதொழுது ஏத்தும்
வெண்நிற மால்விடை அண்ணல் — வேட்கள நன்நகராரே.

5. On His garland of *kondrai*, bees hum tunefully;
He is bedaubed with the milk-white holy ash;
He wears the sacred thread; He is concorporate
with a Woman; He gutted with fire the three
hostile citadels; His forehead sports an eye;
the crescent is His chaplet.
He is the Lord of the goodly town Vetkalam
who rides a white and gargantuan Bull,
hailed by the supernals with folded hands.

6. கறி வளர் குன்றம் எடுத்தவன் காதல் கண் கவர் ஐங்கணையோன் உடலம்
பொறி வளர் ஆர்அழல் உண்ணப் பொங்கிய பூதப்புராணர்,
மறி வளர் அம் கையர், மங்கை ஓர்பங்கர், மைஞ்ஞுல்றமான்உரி — தோல்உடை ஆடை
வெறி வளர் கொன்றைஅம்தாரார் — வேட்கள நன்நகராரே.

6. He is the *Bhūta-Purānar*; His ire consumed with
sputtering fire the eesome one of five arrows –
the beloved son dear to him that lifted up
the (Govardana) hill abounding in pepper-creepers;
His beautiful hand sports a fawn; His half is a Woman;
He is clad in the skin of a dark tusker;
He wears the fragrant garlands of odoriferous *kondrai*.
His, indeed, is the goodly town Vetkalam.

7. மண் பொடிக்கொண்டு எரித்து ஓர் சுடலை, மாமலைவேந்தன்மகள் மகிழ,
நுண்பொடிச் சேர நின்று ஆடி, நொய்யன செய்யல் உகந்தார்,
கண் பொடி வெண்தலைஓடு கை ஏந்திக் காலனைக் காலால் கடிந்து உகந்தார்,
வெண்பொடிச் சேர் திருமார்பர் – வேட்கள நன்நகராரே.

7. In the Crematorium where everything was reduced
to dust and dusticle, He so danced that minute
dust particles got stuck to Him; the Daughter of the Mountain
witnessed His dance and rejoiced.
Thus He performed His subtle acts.
He whose hand holds a white and eyeless skull as His
alms-bowl, kicked Death to death and rejoiced.
His chest is adorned with the white powdery ash;
His, indeed, is the goodly town Vetkalam.

8. ஆழ்தரு மால்கடல் நஞ்சினை உண்டு ஆர்அமுதம் அமரர்க்கு அருளி,
சூழ்தரு பாம்பு அரை ஆர்த்து, சூலமோடு ஒண்மழு ஏந்தி,
தாழ்தரு புன்சடை ஒன்றினை வாங்கித் தண்மதியம் அயலே ததும்ப
வீழ்தரு கங்கை கரந்தார் – வேட்கள நன்நகராரே.

8. He quaffed the venom of the vast and deep ocean;
He blessed the supernals with elixir;
Cinctured with a serpent and holding a trident
and a bright *mazhu,* even as the moist crescent
floated on one side, He received and concealed the Ganga
that descended down amain,
in a dangling strand of His ruddy matted hair.
His, indeed, is the goodly town Vetkalam.

9. திருஒளி காணிய பேதுறுகின்ற திசைமுகனும், திசைமேல் அளந்த
கருவரை ஏந்திய மாலும், கைதொழ நின்றதும் அல்லால்,
அரு வரை ஒல்க எடுத்த அரக்கன் ஆடு எழில் – தோள்கள் ஆழத்து அழுந்த
வெருஉற ஊன்றிய பெம்மான் – வேட்கள நன்நகராரே.

9. Brahma whose visages face all the directions
and Vishnu – the one that, of yore, scaled the worlds
and lifted up the dark mountain –,
were baffled when they beheld Him
in the divine form of a column of fire.
He is the Lord-God who so pressed His toe
that the mighty shoulders of the Rakshasa
who lifted up the immense mountain,
were crushed and sunk very low,
the while dread seized him.
His, indeed is the goodly town Vetkalam.

10. அத்தம் மண் தோய் துவரார், அமண்குண்டர், ஆதும் அல்லா உரையே உரைத்துப்
பொய்த்தவம் பேசுவதுஅல்லால் புறன்உரை யாதொன்றும் கொள்ளேல்;
முத்து அன வெண்முறுவல்(ல்) உமை அஞ்ச, மூரி–வல் ஆனையின் ஈர்உரி போர்த்த
வித்தகர், வேதமுதல்வர் – வேட்கள நன்நகராரே.

10. Listen not to the senseless words of those
whose garments are ochre-hued
and the adipose Samanas who but blabber balderdash
and preach pseudo-*tapas*.
He is the adroit One who flayed the mighty tusker
and mantled Himself in its hide
witnessing which Uma shuddered.
He is the Author of the Vedas
and His, indeed, is the goodly town Vetkalam.

11. விண் இயல் மாடம் விளங்கு ஒளி வீதி வெண்கொடி எங்கும் விரிந்து இலங்க,
நண்ணிய சீர் வளர் காழி நல்–தமிழ் ஞானசம்பந்தன்
பெண்ணின் நல்லாள் ஒருபாகம் அமர்ந்து பேணிய வேட்களம்மேல் மொழிந்த
பண் இயல் பாடல் வல்லார்கள் பழியொடு பாவம் இலாரே.

11. *Nal-Tamizh* Gnānasambandhan of Kāzhi
of accrescent glory – the streets of which
are dight with bright mansions whence
white and unfurled streamers waft in all directions –,
hath sung of the Lord concorporate with the virtuous Woman
and who presides over and fosters Vetkalam.
They that have mastered these melodic hymns
stand freed of sin and blame.

Notes

1. The Lord is 'Antam-Ādi' according to St. Meykandār. Siva is the ultimate Resolver of the cosmos. It is He who re-evolves it into being.

2. *Inch*: A finger's breadth.

6. Bhūta Purānar: The Primal Lord of all entia, i.e., Siva.

7. The Crematorium: The forum where the ultimate dissolution of the cosmos takes place.

   The subtle acts: The *pancha-kritya* which comprises the fivefold acts of evolution, maintenance, absorption, concealment and conferment of grace. It is by His dance Siva enacts all these acts.

8. Mazhu means (1) a battle-axe and (2) a burning rod.

9. According to the great commentator Nacchinārkkiniyar, he who wears the freshly-peeled off hide of an elephant, dies instantaneously. This is the raison d'etre of Uma's dread. The message is that there is nothing in the cosmos that is potent to harm the Omnipotent Siva.

11. The Virtuous Woman: *Penninnallāll*.

    This refers to the goddess of Vetkalam. Her name is *Nallanāyaki*.

40. Thiruvāzhkoliputthūr

From Omāmpuliyūr the boy-saint arrived at Tiruvāzhkoliputthūr where he sang the following decad.

40. திருவாழ்கொளிபுத்தூர்

பண்: தக்கராகம்

1. பொடி உடை மார்பினர், போர் விடை ஏறி, பூதகணம் புடை சூழ,
கொடி உடை ஊர் திரிந்து ஐயம் கொண்டு, பலபல கூறி,
வடிவு உடை வாள்நெடுங்கண் உமை பாகம்ஆயவன் வாழ்கொளிபுத்தூர்,
கடி கமழ் மா மலர் இட்டு, கறைமிடற்றான் அடி காண்போம்.

1. Chest bedaubed with the holy ash, He rides a martial Bull
surrounded by the *Bhūta*-Hosts.
He goes abegging, descanting on many things,
in all the towns where streamers fly.
Uma of long and shapely eyes is part of Him
who abides at Vāzhkoliputthūr.
Let us come by a *darshan* of the feet of Him whose neck
is blue-hued, and strew on them large and fragrant flowers.

2. அரை கெழு கோவண ஆடையின்மேல் ஓர் ஆடுஅரவம்(ம்) அசைத்து, ஐயம்
புரை கெழு வெண்தலை ஏந்தி, போர் விடை ஏறி, புகழ
வரை கெழு மங்கையது ஆகம் ஓர்பாகம்ஆயவன் வாழ்கொளிபுத்தூர்,
விரை கெழு மா மலர் தூவி, விரிசடையான் அடி சேர்வோம்.

2. Clad in *kovanam* and cinctured with a dancing snake
He holds a holey skull as His begging-bowl.
He rides a martial Bull extolled by all;
the Daughter of the Mountain forms part of His body
who abides at Vāzhkoliputthūr.
Let us reach the feet of Him of spreading matted hair
and strew thereon olent blossoms.

3. "பூண் நெடுநாகம் அசைத்து, அனல்ஆடி, புன்தலை அங்கையில் ஏந்தி,
ஊண் இடு பிச்சை, ஊர் ஐயம் உண்டி" என்று பல கூறி,
வாள்நெடுங்கண் உமைமங்கை ஓர்பாகம்ஆயவன் வாழ்கொளிபுத்தூர்,
தாள் நெடு மா மலர் இட்டு, தலைவன தாள்நிழல் சார்வோம்.

3. A long serpent is His ornament; He dances in the fire;
He holds a trivial skull in His beautiful hand.
He is spoken of in many ways, even thus: "He but eats
the alms of townsfolk; His food is nought but alms."

Uma of long and bright eyes is part of Him
who abides at Vāzhkoliputthūr.
Let us reach Him, strew choice and great flowers
on His feet and thus gain the Lord-Master's feet.

4. "தார்இடுகொன்றை, ஓர் வெண்மதி, கங்கை, தாழ்சடைமேல் அவை சூடி,
ஊர் இடு பிச்சை கொள் செல்வம் உண்டி" என்று பல கூறி,
வார் இடுமென்முலை மாது ஒருபாகம்ஆயவன் வாழ்கொளிபுத்தூர்,
கார் இடு மா மலர் தூவி, கறைமிடற்றான் அடி காண்போம்.

4. On His dangling matted hair, He wears the chaplet
of *kondrai*, a white crescent and the Ganga.
Let us hail Him thus: "All His wherewithal is
the alms of the townsfolk and that indeed is His food."
Uma whose breasts are coverd by a breast-band is
part of Him who abides at Vāzhkoliputthūr
Let us strew the great flowers of the rainy season
and have a *darshan* of the feet of the blue-necked One.

5. "கன மலர்க்கொன்றைஅலங்கல் இலங்க, காதில் ஓர் வெண்குழையோடு
புன மலர்மாலை புனைந்து, ஊர் புகுதி" என்றே பல கூறி,
வனமுலை மாமலைமங்கை ஓர்பாகம்ஆயவன் வாழ்கொளிபுத்தூர்,
இனமலர் ஏய்ந்தன தூவி, எம்பெருமான் அடி சேர்வோம்.

5. Let us hail Him thus: "Bright with a garland
of auric *kondrai*, wearing a white *kuzhai*
in one ear and adorned with the garlands woven
with the garden-flowers, You barge into the town!"
Lo, the great Mountain's Daughter of shapely breasts is
part of Him who abides at Vāzhkoliputthūr.
Strewing choice flowers befitting Him, let us gain
the feet of the Lord-God.

6. "அளை வளர் நாகம் அசைத்து, அனல்ஆடி, அலர்மிசை அந்தணன் உச்சிக்
களை தலையில் பலி கொள்ளும் கருத்தனே! கள்வனே!" என்னா,
வளை ஒலி முன்கை மடந்தை ஓர்பாகம்ஆயவன் வாழ்கொளிபுத்தூர்,
தளை அவிழ் மா மலர் தூவி, தலைவன தாள்இணை சார்வோம்.

6. Let us hail Him thus:
"O Lord-God who is cinctured with a serpent
that lives in the chthonic hole,
O One who dances in the fire,
O Lord who receives alms in the cranium of Brahma –

the Brahmin ensconced on the Lotus –,
O Thief (of hearts)!"
Let us fare forth and reach Vāzhkoliputthūr where
He abides with Her of bebangled forearms
and strew on His feet twain
suaveolent and blown blossoms.

7. "அடர் செவி வேழத்தின் ஈர்உரி போர்த்து, அழிதலை அங்கையில் ஏந்தி,
உடல் இடு பிச்சையோடு ஐயம் உண்டி" என்று பல கூறி,
மடல் நெடு மா மலர்க்கண்ணி ஓர்பாகம் ஆயவன் வாழ்கொளிபுத்தூர்,
தட மலர்ஆயின தூவி, தலைவன தாள் நிழல் சார்வோம்.

7. Let us hail Him as the One that flayed the tusker
with large ears, and mantled Himself
with its hide dripping with blood,
as the One who holds in His beautiful hand
the severed skull in which He receives
aiyam and *picchai* which He eats.
Let us fare forth to reach Vāzhkoliputthūr
where abides the Lord concorporate with Her
whose eyes are large and lovely like flowers,
and strew on His feet the blowing blossoms
and thus gain the shade of His salvific feet.

8. "உயர்வரை ஒல்க எடுத்த அரக்கன் ஒளிர் கடகக் கை அடர்த்து,
அயல் இடு பிச்சையோடு ஐயம் ஆர்தலை" என்று அடி போற்றி,
வயல் விரி நீல நெடுங்கணி பாகம்ஆயவன் வாழ்கொளிபுத்தூர்,
சய விரி மா மலர் தூவி, தாழ்சடையான் அடி சார்வோம்.

8. Hailing Him as the One who crushed the shiny,
braceleted hands of the Rakshasa that durst
shake and uproot the lofty mountain
and as the One who eats the *aiyam* and *picchai*
offered by others,
let us reach Vāzhkoliputthūr of Him
of dangling and spreading matted hair, who is
concorporate with the large-eyed Lady, whose eyes
are like the blue lilies that blossom in the fields,
extol His feet and strew excellent and burgeoning
flowers thereon and gain refuge in them.

9. "கரியவன் நான்முகன் கைதொழுது ஏத்த, காணலும் சாரலும் ஆகா
எரிஉரு ஆகி, ஊர் ஐயம் இடு பலி உண்ணி" என்று ஏத்தி,

வரிஅரவு அல்குல் மடந்தை ஓர்பாகம்ஆயவன் வாழ்கொளிபுத்தூர்,
விரிமலர்ஆயின தூவி, விகிர்தன சேவடி சேர்வோம்.

9. Hailing Him as the One who uprose as a column of fire,
(the base and tip of) which could neither be
seen nor reached by the dark one or the Four-faced
who adored Him with folded hands,
and as the *Vikirtan* at Vāzhkoliputthūr
who is concorporate with Her whose forelap
is like unto the hood of the speckled serpent,
let us strew flowers and gain His salvific feet.

10. "குண்டுஅமணர், துவர்க்கூறைகள் மெய்யில் கொள்கையினார், புறம்கூற,
வெண்தலையில் பலி கொண்டல் விரும்பினை" என்று விளம்பி,
வண்டு அமர் பூங்குழல் மங்கை ஓர்பாகம்ஆயவன் வாழ்கொளிபுத்தூர்,
தொண்டர்கள் மா மலர் தூவ, தோன்றி நின்றான் அடி சேர்வோம்.

10. Hailing Him as the One who is slandered by
the adipose Samanas and the ochre-robed (Buddhists),
and as the One who likes to receive alms in a white skull,
let us hie to Vāzhkoliputthūr of Him who is concorporate
with Her whose flowery tresses are buzzed by bees,
and be blessed with a *darshan* of His feet,
strewn with great flowers by the adoring devotees
who experience His living presence.

11. கல் உயர் மாக்கடல் நின்று முழங்கும் கரை பொரு காழி அ(ம்) மூதூர்
நல்உயர் நால்மறை நாவின் நல்–தமிழ் ஞானசம்பந்தன்
வல் உயர் சூலமும் வெண்மழுவாளும் வல்லவன் வாழ்கொளிபுத்தூர்,
சொல்லிய பாடல்கள் வல்லார் துயர் கெடுதல் எளிதுஆமே.

11. *Nal-Tamizh*-Gnānasambandhan – the articulator
of the lofty quartet of the Vedas –,
of hoary and beauteous Kāzhi close to the shore
besieged by the mountainous and roaring
breakers of the main,
hath sung of Vāzhkoliputthūr where abides the Lord
that wields the long and strong spear and the bright *mazhu*.
They that are masters of these verses, can,
with ease, set at nought their misery.

Notes

1. The first ten verses celebrate the salvific feet of Siva. The feet of the Lord are our sole refuge. Even Christians who are against idolatry, have taken to the practice of adoring the feet of the Lord. Rev. M. Winslow took many years to compile his dictionary. Various hindrances and discouragements notwithstanding, he completed his chosen task. When the work appeared in print, he said: "At the feet of JEHOVAH-JESUS it is humbly laid...."

   Tiruvalluvar in his prolegomenon chose to celebrate nought but the feet of God.

   The Tamil Siva Gnāna Bhotham hails the feet of Siva in its twelfth – the final sutra. The feet of Siva are described as ruddy/salvic Flowers that uphold everything. Strewing flowers on these ruddy/salvic Flowers constitutes true worship.

2. Siva is subtle as the scent in flowers. He is therefore fittingly hailed with fragrant blossoms.

3. *Thāll nizhal*: The shade of the Lord's feet. "Eesan enthai inai adi neezhal" (the shade of the feet twain of the Lord-Father) are the words of St.Appar.

4. Siva *darshan* leads to Siva-yoga which, in turn, leads to Siva-bhoga.

5. Kuzhai: It is the same as todu–a scroll of palm-leaf inserted in the ear-lobe.

7. aiyam: Alms offered to eligible persons.

   picchai: Alms offered to brahmachāris and sannyasin.

   The explanations offered at page 563 of the Dharmapuram edition (1997) are misleading.

9. The dark one: Vishnu.

   Vikirtan: He who is unlike others.

41. Tiruppāmpuram

Adoring the Lord-God at his many shrines, the Godly saint arrived at Mēyacchūr whence he came to Pāmpuram and sang the following decad.

41. திருப்பாம்புரம்

பண்: தக்கராகம்

1. சீர் அணி திகழ் திருமார்பில் வெண்நூலர், திரிபுரம் எரிசெய்த செல்வர்,
வார் அணி வனமுலை மங்கை ஓர்பங்கர், மான்மறி ஏந்திய மைந்தர்,
கார் அணி மணிதிகழ் மிடறு உடை அண்ணல், கண்ணுதல், விண்ணவர் ஏத்தும்
பார் அணி திகழ்தரு நால்மறையாளர் — பாம்புர நன் நகராரே.

1. He wears on His beautiful chest decked with
glorious jewels the white (sacred) thread;
The opulent One gutted with fire the three citadels;
He is concorporate with Her whose beauteous breasts
are cinctured with a breast-band;
The puissant One holds a fawn (in His palm);
The noble One's dark neck dazzles like sapphire;
He is the triple-eyed One;
He is the Author of the four Vedas that are world-famous;
His is the grand town Pāmpuram.

2. கொக்குஇறகோடு கூவிளம் மத்தம் கொன்றையொடு எருக்கு அணி சடையர்,
அக்கினொடுஆமை பூண்டு அழகுஆக அனல் அதுஆடும் எம் அடிகள்,
மிக்க நல் வேதவேள்வியுள் எங்கும் விண்ணவர் விரைமலர் தூவ,
பக்கம் பல்பூதம் பாடிட, வருவார் — பாம்புர நன்நகராரே.

2. He wears in His matted hair *kokkiraku*,
kūvilam, *mattham*, *kondrai* and *erukku*;
Our Lord-God is adorned with bones and a carapace;
He dances enchantingly in the fire;
As the supernals strew olent flowers in the excellent
Vedic sacrifices and adore Him, He comes
accompanied by the singing *Bhūta*-Hosts.
His is the grand town Pāmpuram.

3. துன்னலின் ஆடை உடுத்து, அதன்மேல் ஓர் சூறை நல் அரவுஅது சுற்றி,
பின்னுவார்சடைகள் தாழவிட்டு ஆடி, பித்தர் ஆய்த் திரியும் எம்பெருமான்,
மன்னு மா மலர்கள் தூவிட, நாளும் மாமலையாட்டியும் தாமும்,
பன்னும் நால்மறைகள் பாடிட, வருவார் — பாம்புர நன்நகராரே.

3. He wears a woven loin-cloth over which is cinctured
a bewitching snake that subsists on air;

His plaited strands of matted hair a-dangle,
Our God roaming about like one demented, comes
dancing on the path damasked with flowers
of ever-during fragrance, with the Lady
of the Mountain, to the chanting of the four Vedas.
His is the goodly town of Pāmpuram.

4. துஞ்சுநாள் துறந்து தோற்றமும் இல்லாச் சுடர்விடு சோதி எம்பெருமான்,
நஞ்சு சேர் கண்டம் உடைய என் நாதர், நள்இருள் நடம்செயும் நம்பர்—
மஞ்சு தோய் சோலை மா மயில் ஆட, மாடமாளிகைதன்மேல் ஏறி,
பஞ்சு சேர் மெல்அடிப் பாவையர் பயிலும் பாம்புர நன்நகராரே.

4. Our Lord–birthless and deathless –, is the radiant light;
My Lord-Master's neck is tinct with venom;
The supremely desirable One dances at dead of night;
He is of the great town Pāmpuram where peacocks
dance in gardens over which nimbi rest,
and where damsels, the soft soles of whose feet are dyed
incarnadine with red-cotton-silk, ascend the terraces
of their storeyed mansions and thither dance.

5. நதிஅதன் அயலே நகுதலைமாலை, நாள்மதி, சடைமிசை அணிந்து,
கதிஅது ஆக, காளி முன் காண, கான்இடை நடம் செய்த கருத்தர்,
விதிஅது வழுவா வேதியர் வேள்வி செய்தவர் ஓத்துஒலி ஓவாப்
பதிஅது ஆகப் பாவையும் தாமும் — பாம்புர நன்நகராரே

5. He wears on His matted hair the crescent and the garland
of skulls which seem to smile, beside the river.
He, indeed, is the Doer who dances with measured steps
in the crematory, witnessed by Kāli.
His is the great town Pāmpuram where
He abides with His Consort and where
the Vedic sacrificers who swerve not from the ordained
rules of ritual, for ever, chant the Vedas.

6. ஓதி நன்கு உணர்வார்க்கு உணர்வுஉடை ஒருவர்; ஒளி திகழ் உருவம் சேர் ஒருவர்;
மாதினை இடமா வைத்த எம் வள்ளல்; மான்மறி ஏந்திய மைந்தர்;
"ஆதி! நீ அருள்" என்று அமரர்கள் பணிய, அலைகடல் கடைய, அன்று எழுந்த
பாதிவெண்பிறை சடை வைத்த எம் பரமர் — பாம்புர நன்நகராரே.

6. He is the peerless One who is the consciousness of those
that meticulously cultivate the scriptures
and gain understanding.

The form of the non-pareil One is sheer radiance;
Our Lord-Patron keeps in His left-half His Consort;
He is the One of prowess who holds a fawn (in His palm).
He is of the grand town Pāmpuram who sports
in His matted hair a slice of the white (full) moon
that uprose from the billowy main,
when the supernals, paying obeisance to Him
hailed Him thus: "O You Alpha! be pleased to grace us"
and then churned the ocean.

7. மாலினுக்கு அன்று சக்கரம் ஈந்து, மலரவற்கு ஒரு முகம் ஒழித்து,
ஆலின்கீழ் அறம் ஓர் நால்வருக்கு அருளி, அனல் அதுஆடும் எம் அடிகள்;
காலனைக் காய்ந்து தம் கழல் அடியால், காமனைப் பொடிபட நோக்கி,
பாலனுக்கு அருள்கள்செய்த எம் அடிகள் — பாம்புர நன்நகராரே.

7. In the distant past, He gifted the Disc to Vishnu;
He did away with a visage of the one on the Lotus;
seated under a Banyan tree He taught Dharma to the Four;
He, our Lord, dances in the fire.
With His ankleted foot, He smote Death to death.
His stare burnt Kāma to cinders.
He graced the boy in ways manifold.
He, indeed, is our Lord-God
and His goodly town is Pāmpuram.

8. விடைத்த வல்அரக்கன் வெற்பினை எடுக்க, மெல்லிய திருவிரல் ஊன்றி,
அடர்த்து அவன்தனக்கு அன்று அருள்செய்த அடிகள்; அனல்அதுஆடும் எம் அண்ணல்—
மடக்கொடிஅவர்கள் வருபுனல் ஆட, வந்து இழி அரிசிலின் கரைமேல்
படப்பையில் கொணர்ந்து பரு மணி சிதறும் பாம்புர நன்நகராரே.

8. When the haughty and puissant Rakshasa uprooted
His mountain, He pressed His soft and lovely toe
and crushed him; then He graced him with many boons.
He is our noble One who dances in the fire.
He is of the grand town Pāmpuram in whose gardens
situate on the banks of the Arisili, where
bashful and liana-like damsels bathe,
great gems get shored up.

9. கடி படு கமலத்து அயனொடு மாலும், காதலோடு அடிமுடி தேட,
செடி படு வினைகள் தீர்த்து அருள்செய்யும் தீவணர்; எம்முடைச் செல்வர்;
முடி உடை அமரர் முனிகணத்தவர்கள் முறைமுறை அடி பணிந்து ஏத்த,
படிஅது ஆகப் பாவையும் தாமும் — பாம்புர நன்நகராரே.

9. When Brahma of the fragrant Lotus and Vishnu –
borne by penchant –, went in quest of His
crown and feet (and failed), He – the fire-hued –,
was pleased to grace them.
He is our opulent Lord; in His goodly town Pāmpuram
He abides with His Consort;
His feet are hailed in all propriety by the thronging
celestials as well as the groups of *munis*.

10. குண்டர், சாக்கியரும், குணம்இலாதாரும், குற்றுவிட்டு உடுக்கையர்தாமும்,
கண்டஆறு உரைத்துக் கால் நிமிர்த்து உண்ணும் கையர்தாம் உள்ளஆறு அறியார்;
வண்டு சேர் குழலி மலைமகள் நடுங்க வாரணம் உரிசெய்து போர்த்தார்;
பண்டு நாம் செய்த பாவங்கள் தீர்ப்பார் – பாம்புர நன்நகராரே.

10. The corpulent Samanas, the ones jejunely clad,
the blasphemers that speak recklessly as they like,
they that eat, standing erect, from out of their cupped hands
as well as the Buddhists void of virtues,
know Him not as He truly is.
He flayed the tusker and mantled Himself in its hide,
even as the Daughter of the Mountain
stood witnessing it, in fright.
He will annul our sins committed in the past.
He is of the goodly town Pāmpuram.

11. பார் மலிந்து ஓங்கிப் பருமதில் சூழ்ந்த பாம்புர நன்நகராரைக்
கார் மலிந்து அழகு ஆர் கழனி சூழ் மாடக் கழுமல முது பதிக் கவுணி–
நார் மலிந்து ஓங்கும் நால்மறை ஞானசம்பந்தன் – செந்தமிழ் வல்லார்
சீர் மலிந்து அழகு ஆர் செல்வம் அது ஓங்கி, சிவன்அடி நண்ணுவர்தாமே.

11. Gnānasambandhan well-versed in the four Vedas,
the one imbued with lofty and swelling devotion,
the one of *Kaundinya gotra*, hailing from
the hoary city Kazhumalam which is girt with
bountiful fields well-watered,
and dight with magnificent mansions,
hath sung of the grand town – the strong-walled Pāmpuram
well-renowned in this vast world.
They that are valiant in his sublime hymns
will thrive in soaring wealth, blessed with
glorious and excellent life
and eventually gain the feet of Siva.

Notes

2. Kokkiraku: The stork's feather. Kokku also refers to an Asura who played havoc, assuming the form of a cruel crane. Siva did away with him and wore a feather of his.

   Mattham: The Datura plant.

   Kuvilam: The Vilva tree/Bael tree.

   Erukku: Madar.

3. As a snake can live without food for many days, it is supposed to subsist on air.

6. A slice of the white (full) moon: The word 'pāthi' does not mean half. Pāthi means part. It is *cem-pāti* which is half. The full moon arose from the milky main. It began to wane by reason of a curse. Siva saved it from its impending and total disaster by wearing it in its crescent-form. Without invoking the aid of Siva, Devas and Asuras took to the churning of the ocean, all in vain. Then it dawned on them that their mighty venture would only prove to be an exercise in stultification. So, they sincerely prayed to Siva and started afresh. After this, the main began to yield things and beings of ever-during weal.

7. The Disc: This sprocket wheel was gifted to Vishnu at Tiruvēzhimizhalai. Siva severed one of the heads of Brahma at Kandiyūr.

   Siva explicated the dharma to the four sages seated under the Banyan tree at Mt. Kailas.

   Siva smote Yama (death) at Kadavūr.

   Kāma: The god of love. He was reduced to cinders by the fire of Siva's third eye at Kailas. According to the Tamil tradition, this event took place in Kurukkai.

   The boy: Upamanyu the son of St.Vyagrapāda.

9. The punishment meted out to Brahma is also an act of grace. Says the Sivagnāna Siddhiyār: "Viewed anywise the act of God is but an act of grace."

42. Tiruppenuperunthurai

Impelled by a desire to adore the Lord of Perunthurai, the boy-saint came from Vēzhimizhalai to this holy town where he sang the following decad.

42. திருப்பேணுபெருந்துறை

பண்: தக்கராகம்

1. பைம் மா நாகம், பல்மலர்க்கொன்றை, பன்றிவெண்கொம்புஒன்று, பூண்டு,
செம்மாந்து, "ஐயம் பெய்க" என்று சொல்லி, செய் தொழில் பேணியோர்; செல்வர்;
அம் மான்நோக்குஇயல், அம் தளிர்மேனி, அரிவை ஓர்பாகம் அமர்ந்த
பெம்மான்; நல்கிய தொல்புகழாளர் – பேணுபெருந்துறையாரே.

1. Adorned with a great hooded serpent, a good many flowers
inclusive of *kondrai* and a white tusk of the Hog,
the rich One who fosters that are dutiful,
goes majestically abegging saying "Give alms."
The Lord-God is concorporate with Her – the one
of beauteous mien whose lovely body is
soft as shoot and whose eyes are like the antelope's .
Hoary is His glory; He is of Penuperunthurai.

2. மூவரும்ஆகி, இருவரும்ஆகி, முதல்வனும்ஆய், நின்றமூர்த்தி–
பாவங்கள் தீர்தர நல்வினை நல்கி, பல்கணம் நின்று பணிய,
சாவம்அது ஆகிய மால்வரை கொண்டு தண் மதில்மூன்றும் எரித்த
தேவர்கள்தேவர், எம்பெருமானார் – தீது இல் பெருந்துறையாரே.

2. He is the Three, the Two and the Primal One.
To rid sins He confers *Siva-punya*.
Even as the many hosts bow to Him in obeisance,
He, the God of gods, with His massive mountain-bow
gutted with fire the three walled-citadels.
He is our Lord-God; He presides over the flawless Perunthurai.

3. செய் பூங்கொன்றை, கூவிளமாலை, சென்னியுள் சேர் புனல், சேர்த்தி,
கொய்பூங்கோதை மாதுஉமை பாகம் கூடி ஓர் பீடு உடை வேடர்–
கை போல் நான்ற கனிகுலைவாழை காய்குலையின் கமுகு ஈன,
பெய் பூம்பாளை பாய்ந்து இழி தேறல் பில்கு பெருந்துறையாரே.

3. Adorned with the woven garlands of *kondrai* blossoms
and *vilva* leaves and sporting the river in His crest,
is He – the gloriously majestic Forester
who is concorporate with Uma who wears
a garland woven of freshly-plucked flowers.

He is of Penuperunthurai where, over the dangling bunches
of the banana tree like unto a tusker's trunk,
the bunches of areca-trees rest,
whilst honey gushes from their flowery spathes.

4. நிலனொடு வானும் நீரொடு தீயும் வாயுவும் ஆகி, ஓர்ஐந்து—
புலனொடு வென்று, பொய்ம்மைகள் தீர்ந்த புண்ணியர் — வெண்பொடிப் பூசி,
நலனொடு தீங்கும் தான்அலது இன்றி, நன்கு எழு சிந்தையர்ஆகி,
மலனொடு மாசும் இல்லவர் வாழும் மல்கு பெருந்துறையாரே.

4. The righteous and holy Siva who is
earth, water, fire, wind and space
is beyond the pentad of senses and falsities.
He abides at the flourishing Penuperunthurai where
dwell *mala*-free and flawless devotees who are
adorned with the white ash and remain poised
in lofty thought; neither good nor evil ensues
save by the will of Siva.

5. பணிவுஆய் உள்ள நன்கு எழு நாவின் பத்தர்கள் பத்திமை செய்ய,
துணியார்— தங்கள் உள்ளம் இலாத சுமடர்கள் — சோதிப்ப (அ) ரியார்;
அணி ஆர் நீலம் ஆகிய கண்டர் — அரிசில் உரிஞ்சு கரைமேல்
மணி வாய் நீலம்வாய் கமழ் தேறல் மல்கு பெருந்துறையாரே.

5. From the humble devotees endowed with disciplined tongues
that hail Him in *bhakti*, He is inseparable.
He is beyond the ken of the ratiocination
of the heartless and brainless folks.
His neck is tinged with the hue of sapphire.
His is the town of Penuperunthurai on the banks
of the Arisili where honey abounds
in blue and bright and fragrant lilies.

6. எண்ணார் தங்கள் மும்மதில் வேவ ஏ வலம் காட்டிய எந்தை,
விண்ணோர் சாரத் தன் அருள் செய்த வித்தகர், வேதமுதல்வர்,
பண் ஆர் பாடல் ஆடல் அறாத பசுபதி, ஈசன், ஓர்பாகம்
பெண் ஆண் ஆய வார்சடை அண்ணல் — பேணு பெருந்துறையாரே.

6. Displaying the prowess of His arrow, our Father
gutted with fire the three citadels of the hostile ones.
He is the Adept who so graced the supernals
that they were enabled to gain access to Him.
He is the Author of the Vedas; He is Pasupati
who sings tunefully and dances.

He is the God; He is the noble One of long and large
matted hair, who is androgynic.
He presides over the town Penuperunthurai.

7. விழை ஆர் உள்ளம் நன்கு எழு நாவில் வினை கெட, வேதம் ஆறு அங்கம்
பிழையா வண்ணம் பண்ணிய ஆற்றால், பெரியோர் ஏத்தும் பெருமான்—
தழை ஆர் மாவின் தாழ் கனி உந்தித் தண்அரிசில் புடை சூழ்ந்த
குழை ஆர் சோலை மென்நடை அன்னம் கூடு பெருந்துறையாரே.

7. With all their mind, afire with desire, they with trained
tongues chant unflawed the Vedas and the six Angas;
thus, even thus, they have annulled their *karma*.
He abides at the town Penuperunthurai
on the banks of the cool Arisili which flows with
the fruit snatched from the dangling
branches of the mango-trees.
Here flourish groves rich in shoots where
gather swans of soft and stately gait.

8. பொன் அம் கானல் வெண்திரை சூழ்ந்த பொருகடல்வேலி இலங்கை
மன்னன் ஒல்க மால்வரை ஊன்றி, மா முரண் ஆகமும் தோளும்
முன் அவை வாட்டி, பின் அருள்செய்த மூஇலைவேல் உடை மூர்த்தி—
அன்னம் கன்னிப்பேடையொடு ஆடி அணவு பெருந்துறையாரே.

8. Ravana, the King of Lanka which is fenced with
the circling, dashing and white-hued billowy sea,
and endowed with golden foreshore groves,
wilted and wobbled, when the Lord that wields the trident
pressed the massive mountain (with His toe)
and caused his great and puissant body and arms
to suffer pain and grow effete.
Eventually, He graced him.
He presides over Penuperunthurai to which
cobs sporting with pens repair.

9. புள் வாய் போழ்ந்து மா நிலம் கீண்ட பொருகடல்வண்ணனும், பூவின்
உள் வாய் அல்லிமேல் உறைவானும், உணர்வு அரியான்; உமைகேள்வன்—
முள் வாய் தாளின் தாமரைமொட்டு இன்முகம்மலர, கயல் பாய,
கள் வாய் நீலம் கண்மலர் ஏய்க்கும் காமர் பெருந்துறையாரே.

9. He, the Consort of Uma, is unknowable to the one
who is of the hue of the tumultous sea,
who tore off the beak of the Bird, and
who burrowed deep into the immense earth

and the one of the richly-petalled Lotus.
He is of the enchanting Perunthurai in the pools
of which lotus-buds of thorny stalk
sweetly burgeon and smile,
kayal fish leap about
and the melliferous blue lilies resembling eyes, abound.

10. குண்டும் தேரும், கூறை களைந்தும் கூப்பிலர் செப்பிலர் ஆகி
மிண்டும் மிண்டர் மிண்டுஅவை கண்டு மிண்டுசெயாது விரும்பும்!
தண்டும் பாம்பும் வெண்தலைசூலம் தாங்கிய தேவர் தலைவர்—
வண்டும் தேனும் வாழ் பொழில் — சோலை மல்கு பெருந்துறையாரே.

10. The adipose and nude ones and the Teras fold not
their hands in worship; neither do they praise Him.
Ignore the miching mallecho of the perverse
and seek with love Siva and His salvific way.
He is the God of gods who bears on His person
the battle-axe, the adder, the white skull and the spear.
He presides over Penuperunthurai in the groves
and gardens of which bees and chafers thrive.

11. கடை ஆர் மாடம் நன்கு எழு வீதிக் கழுமலஊரன் — கலந்து
நடை ஆர் இன்சொல் ஞானசம்பந்தன் — நல்ல பெருந்துறை மேய
படை ஆர் சூலம்வல்லவன் பாதம் பரவிய பத்துஇவை வல்லார்
உடையார் ஆகி, உள்ளமும் ஒன்றி, உலகினில் மன்னுவர்தாமே.

11. He of the town of Kazhumalam the streets of which
abound in lofty thresholded mansions,
Gnānasambandhan whose words are sweet and salvific
and whose poetic style is stately and sublime,
hath sung in praise of the feet of the One
that abides at Penuperunthurai – the valiant
wielder of His weapon which is the trident.
They that are well versed in this decad and recite them,
with their souls oned with Siva,
will own Him as their own and will
flourish well in this world.

Notes

1. The Hog: The Cosmic Boar / Vishnu.
2. The Three: Brahma, Vishnu and Rudra.

The Two: Siva and Sakti.

The Primal One: The one and only aeviternal Siva.

Mountain bow: Mount Meru.

3. Vetar: Hunter/Forester.

Vetam also means the salvific form. Vide sutra 12, Sivagnāna Bhotham.

4. earth, water ...:

Cf. "Fivefold You pervade the earth..." - The Tiruvāchakam.

This is not Brahma-Parināma-Vāda. It should be remembered that "Maya is coeval with the phenomenon of change, while Siva is its ground." - Dr. Krishna Sivaraman.

The Lord Siva is the 'womb-of-all'. Brahman is aptly celebrated as the *Yoni* – the birth-place of all things. Siva is *bhūta-yoni, brahma-yoni* as well as *sastra-yoni.*

neither good nor evil...: "Thou art not aught in the world: nought is there save Thee..." - The Tiruvāchakam, 22-7.

9. The Bird: The Asura called Bhagāsura who assumed the form of a stork. Vishnu killed him.

43. Tirukkarkudi

The boy-saint adored the Lord at Tirupparāitthurai and came to Karkudi where he sang the following decad.

43. திருக்கற்குடி

பண்: தக்கராகம்

1. வடம் திகழ் மென்முலையாளைப் பாகம்அதுஆக மதித்து,
தடந் திரை சேர் புனல்மாதைத் தாழ்சடை வைத்த சதுரர்;
இடம் திகழ் முப்புரிநூலர்; துன்பமொடு இன்பம்அது எல்லாம்
கடந்தவர்– காதலில் வாழும் கற்குடி மா மலையாரே.

1. Concorporate with Her whose delicate breasts are
cinctured with a breast-band,
the adroit One bears on His dangling matted hair
the damsel Ganga – the river big with billows.
He wears three bright strands of the sacred thread;
He is alike beyond misery and joy;
He abides in love at the great hill – Karkudi.

2. அங்கம்ஓர்ஆறொடு ஐவேள்விஆன அருமறைநான்கும்
பங்கம் இல் பாடலோடு ஆடல் பாணி பயின்ற படிறர்—
சங்கம்அது ஆர் குறமாதர் தம் கையின் மைந்தர்கள் தாவிக்
கங்குலில் மா மதி பற்றும் கற்குடி மா மலையாரே.

2. He, the Trickster, is the practitioner of the four
rare Vedas, the six Angas, songs
of flawless music, dance and *pāni*.
He is of the great hill – Karkudi where the young
male children held by the hands
of the *Kurava*-women bebangled with sea-shells,
leap up to seize the great moon,
when night invests the sky.

3. நீர் அகலம் தரு சென்னி நீடிய மத்தமும் வைத்து,
தாரகையின் ஒளி சூழ்ந்த தண்மதி சூடிய சைவர்—
போர் அகலம் தரு வேடர் புனத்துஇடை இட்ட விறகில்
கார்அகிலின் புகை விம்மும் கற்குடி மா மலையாரே.

3. In His great crest, He – the Saivite –, sports the river,
the long *mattham* and the moist crescent
surrounded by the bright starry hosts.
He is of the great hill – Karkudi where from the firewood
secured from the wood by the broad-chested

and martial hunters
and used by their women to feed the fire
the dark smoke of eaglewood spirals up and up.

4. “ஒருங்கு அளி, நீ இறைவா!” என்று உம்பர்கள் ஓலம் இடக் கண்டு,
இருங்களம் ஆர விடத்தை இன் அமுது உன்னிய ஈசர்—
மருங்கு அளி ஆர் பிடி வாயில் வாழ் வெதிரின்முளை வாரி,
கருங்களியானை கொடுக்கும் கற்குடி மா மலையாரே.

4. He is the Lord who, resolving to bless the gods with elixir,
consumed a throatful of venom as though it were ambrosia,
when they lamentingly appealed to Him thus:
“O You God, be pleased to save us all!”
He is of the great Hill – Karkudi where the dark
and musty tusker, with delight seizes
the sprouts of the bamboos and puts them
into the mouth of its beloved mate that stands nearby.

5. போர் மலி திண் சிலை கொண்டு, பூதகணம் புடை சூழ,
பார் மலி வேடுஉருஆகி, பண்டு ஒருவற்கு அருள்செய்தார்—
ஏர் மலி கேழல் கிளைத்த இன்ஒளி மா மணி எங்கும்
கார் மலி வேடர் குவிக்கும் கற்குடி மா மலையாரே.

5. Surrounded by the *Bhūta*-Hosts and armed with
a martial and mighty bow, assuming the guise
of a forester – much celebrated by the world –,
He bestowed grace on one, in the past.
He is of the Hill – Karkudi where dark-hued hunters
gather and pile up everywhere great gems
of purest ray, dug up and scattered by the shapely hogs.

6. உலந்தவர் என்புஅது அணிந்தே, ஊர் இடு பிச்சையர்ஆகி,
விலங்கல்வில் வெங்கனலாலே மூஎயில் வேவ முனிந்தார்—
நலம் தரு சிந்தையர்ஆகி, நா மலி மாலையினாலே
கலந்தவர் காதலில் வாழும் கற்குடி மா மலையாரே.

6. Decked with the bones of the dead, He roves in towns
seeking alms from the townsfolk.
With His mountain-bow, in sheer ire, He gutted with
cruel fire the three walled-citadels.
He is of the great Hill – Karkudi where abide in love
devotees of goodly *chinta* who hail Him
with their garlands of hymns which they
sweetly sing, and thus come by at-one-ment with Siva.

7. மான் இடம் ஆர்தரு கையர், மா மழு ஆரும் வலத்தார்,
ஊன் இடை ஆர் தலைஓட்டில் உண்கலன்ஆக உகந்தார்—
தேன் இடை ஆர்தரு சந்தின் திண் சிறையால் — தினை வித்தி,
கான்இடை வேடர் விளைக்கும் கற்குடி மா மலையாரே.

7. In His left hand He holds an antelope; in His right a great *mazhu*;
His delightful eating-bowl is a skull
to which flesh is still attached.
He is of the great Hill – Karkudi where the woodland hunters
sow and grow millet in the interspaces
strongly fenced with sandalwood trees in which
buzzing bees build their honey-combs.

8. வாள் அமர் வீரம் நினைந்த இராவணன் மாமலையின்கீழ்
தோள் அமர் வன்தலை குன்றத் தொல்விரல் ஊன்று துணைவர்—
தாள் அமர் வேய் தலை பற்றித் தாழ் கரி விட்ட விசை போய்
காளம்அது ஆர் முகில் கீறும் கற்குடி மா மலையாரே.

8. The ancient and ever-aidant One so pressed
His toe that the arms and the mighty heads
of Ravana who thought no end of his swordsmanship
got crushed under the great mountain.
He is of the great Hill – Karkudi, where when the top
of the well-rested bamboo held by the tusker,
being released, springs up amain
and splinters the dark nimbus.

9. தண்டு அமர் தாமரையானும், தாவி இம் மண்ணை அளந்து
கொண்டவனும், அறிவு ஒண்ணாக் கொள்கையர், வெள்விடை ஊர்வர்—
வண்டு இசைஆயின பாட, நீடிய வார் பொழில் நீழல்,
கண்டு அமர் மா மயில் ஆடும் கற்குடி மா மலையாரே.

9. He whose mount is the white Bull and whose stature
is not to be known by him seated on the stalked Lotus
and by him who came to possess the earth
by crossing it in a (giant) leap.
He is of the great Hill – Karkudi, where beholding
the shade of its extensive groves, great peacocks
feel delighted and dance when bees begin to bombinate.

10. மூத் துவர் ஆடையினாரும், மூசு கடுப்பொடியாரும்,
நாத் துவர் பொய்ம்மொழியார்கள், நயம் இலரா மதி வைத்தார்;
ஏத்து உயர் பத்தர்கள் சித்தர் இறைஞ்ச, அவர் இடர்எல்லாம்
காத்தவர் — காமரு சோலைக் கற்குடி மா மலையாரே.

10. Those that wear the ochre-robe,
those that gobble aplenty the powder of myrobalan
those that utter false words that sour their tongues
and those whose intellect conforms not to *niti*,
(are irredeemable).
He is of the great Karkudi Hill girt with enchanting gardens;
He saves them – the noble devotees and the *Siddhas*
that hail and invoke Him –,
from all their troubles.

11. காமரு வார் பொழில் சூழும் கற்குடி மா மலையாரை
நா மரு வண்புகழ்க் காழி நலம் திகழ் ஞானசம்பந்தன்
பா மரு செந்தமிழ்மாலை பத்துஇவை பாட வல்லார்கள்
பூ மலி வானவரோடும் பொன்னுலகில் பொலிவாரே.

11. They that are valiant to melodise the ten rhythmic verses
constituting the garland of chaste Tamil
composed by Gnānasambandhan
of weal-abounding and munificently glorious Kāzhi
girt with extensive and enchanting groves,
will abide with the splendorous supernals in the golden heaven.

Notes

1. In the past, Karkudi was surrounded by forests. It was a settlement of foresters. It is very near Kumāra Vayalūr so dear to St.Arunagirināthar.
2. Pāni: This Tamil word means hand. In olden days, as now, musicians kept time, clapping hands. So pāni also means *tālam*.
3. Siva is referred to as a Saivite. Indeed He is the one and only Anādi-Saiva. The modern temple-priests are Ādi-Saivas.
5. one : He is Arjuna.
6. Chinta: According to David Buck chinta is mind-heart.
7. Honey and millet-powder form part of the victuals of the foresters.
10. The Tamil word *nayam* means *niti*. Vide Parimel Azhakar's commentary on the 97th Tirukkurall.

44. Tiruppācchilācchirāmam

Adoring Siva at Anpilālanthurai and Mānthurai the boy-saint arrived at Pācchilācchirāmam. There the local chieftain received our Saint in all propriety. He implored our Saint to cure his daughter of the *grand mal* with which the lass was afflicted. At this he sang the following decad in the shrine of the Lord-God. Lo and behold! The lass stood cured instantaneously.

44. திருப்பாச்சிலாச்சிராமம்

பண்: தக்கராகம்

1. துணி வளர் திங்கள் துளங்கி விளங்க, சுடர்ச்சடை சுற்றி முடித்து,
பணி வளர் கொள்கையர், பாரிடம் சூழ, ஆர் இடமும் பலி தேர்வர்;
அணி வளர் கோலம்எலாம் செய்து, பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
மணி வளர் கண்டரோ, மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே?

1. A-dazzle with a crescent, He sports a well-bound crest
of bright strands of matted hair.
He is adorned with adders; He goes seeking alms
everywhere encircled by the *Bhūta*-Hosts.
Does it become the greatness of Him – the One
of sapphire-hued neck, at Pacchilācchirāmam
who is decked with splendorous ornaments
to cause the lass to languish?

2. கலை புனை மான்உரி – தோல்உடை ஆடை; கனல்சுடரால் இவர் கண்கள்;
தலை அணி சென்னியர்; தார் அணி மார்பர்; தம் அடிகள் இவர் என்ன,
அலை புனல் பூம்பொழில் சூழ்ந்து அமர் பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
இலை புனை வேலரோ, ஏழையை வாட இடர் செய்வதோ இவர் ஈடே?

2. He is clad in a deer-skin; His eyes blaze like fire;
His crest sports a wreath of skulls and His chest
is adorned with a garland.
Is it becoming on His part – the Wielder of a leafy spear
that abides at Pācchilācchirāmam which is
girt with flowery groves laved by the wavelets of streams–,
to trouble the damsel and cause her wilt?

3. வெஞ்சுடர் ஆடுவர், துஞ்சு இருள்; மாலை வேண்டுவர்; பூண்பது வெண்நூல்;
நஞ்சு அடை கண்டர்; நெஞ்சு இடம்ஆக நண்ணுவர், நம்மை நயந்து;
மஞ்சு அடை மாளிகை சூழ்தரு பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ, பைந்தொடி வாடச் சிதைசெய்வதோ இவர் சீரே?

3. He dances in the blazing fire when all beings pass away;
He wears the white, sacred thread; He loves us who love Him

and abides in our bosoms.
Does it become the glory of the bright and ruddy One
that abides at Pācchilācchirāmam dight with
mansions on the tops of which clouds rest,
to enervate the beautifully-bangled belle
and cause her wilt?

4. கன மலர்க்கொன்றைஅலங்கல் இலங்க, கனல்தரு தூ மதிக்கண்ணி
புன மலர்மாலை அணிந்து, அழகுஆய புனிதர்கொல்ஆம் இவர் என்ன,
அனம் மலி வண்பொழில் சூழ்தரு பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
மனம் மலி மைந்தரோ, மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே?

4. It is thus He is hailed by His devotees: "Adorned with
the garland of *kondrai* flowers which bloom
during the rainy season, He, the holy One handsome,
wears the chaplet of the pure and fierce crescent which causes
the parted spouses to grieve.
Decked with the garlands of garden-flowers is He –
the Holy One who confers contentment on His devotees
and abides at Pācchilācchirāmam
girt with uberous gardens galore.
Does it become Him to cause the lass languish in languor?

5. மாந்தர்தம் பால் நறுநெய் மகிழ்ந்து ஆடி, வளர்சடைமேல் புனல் வைத்து,
மோந்தை, முழா, குழல், தாளம், ஓர் வீணை, முதிர ஓர் வாய்மூரி பாடி,
ஆந்தைவிழிச் சிறு பூதத்தர்; பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
சாந்து அணி மார்பரோ, தையலை வாடச் சதுர் செய்வதோ இவர் சார்வே?

5. He bathes in joy in milk and fragrant ghee offered by
His devotees; He sports a river in His ever-growing,
matted hair.
To the accompaniment of *montai*, *muzhā*, *kuzhal*,
tālam and peerless *vina*
He sings *Vāi muri*.
His pyknic *Bhūtas* are owl-eyed.
Does it become Him whose chest is bedaubed with
sandalwood-paste, the Tactician who abides at
Pācchilācchirāmam to steep in stupor
the lass and cause her wilt?

6. நீறு மெய் பூசி, நிறைசடை தாழ, நெற்றிக்கண்ணால் உற்று நோக்கி,
ஆறுஅது சூடி, ஆடுஅரவு ஆட்டி, ஐவிரல்கோவண ஆடை
பால் தரு மேனியர்; பூதத்தர்; பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
ஏறுஅது ஏறியர்; ஏழையை வாட இடர் செய்வதோ இவர் ஈடே?

6. His body ash-bedaubed, His dense matted hair a-dangle,
His eye in the forehead scrutinising closely,
wearing in His crest a river and causing a snake to dance,
the milk-hued One – the Lord of *Bhūta*-Hosts –,
stands clad in a loin-cloth, the breadth
of which is five fingers.
Is it proper on His part – the Rider of the Bull –,
abiding at Pācchilācchirāmam
to cause the hapless lass to languish?

7. பொங்கு இள நாகம், ஓர் ஏகவடத்தோடு, ஆமை, வெண்நூல், புனை கொன்றை,
கொங்கு இள மாலை, புனைந்து அழகுஆய குழகர்கொல்ஆம் இவர் என்ன,
அங்கு இளமங்கை ஓர்பங்கினர்; பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
சங்குஒளிவண்ணரோ, தாழ்குழல் வாடச் சதிர் செய்வதோ இவர் சார்வே?

7. Devotees hail Him thus: "He wears on His person
a young adder of soaring wrath, an *eka-vatam*,
a carapace, a sacred thread, a garland of *kondrai*
and wreaths of fresh and pollen-laden flowers;
He is concorporate with His young Consort.
Behold Him – the young and handsome One!"
Does it become the Adept abiding at Pācchilācchirāmam,
the One whose hue is like that of the bright chank,
to cause her of flowing hair to grieve and wilt?

8. ஏ வலத்தால் விசயற்கு அருள்செய்து, இராவணன்தன்னை ஈடு அழித்து,
மூவரிலும் முதல்ஆய் நடுஆய மூர்த்தியை அன்றி மொழியாள்;
